Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :277 ஆவணி 17 ஆம் நாள் புதன்கிழமை 02 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 20




## யாரும் எதுவும் செய்ய முடியாது

### அரச அதிகாரிகள் முன்பாக அங்கஜன் கருத்து

யாழ்ப்பாணம், செப். 2

என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்று யாழ்ப்பாணமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 'இணைத்' தலைவர் அங்கஜன் இராம நாதன் அரச அதிகாரிகள் முன்பாகத் தெரிவித்தார். யாழ்ப்பாண 18 ➤

## காலை வாரிய ஆதரவாளர்கள்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுவின் 'இணைத்' தலைவர் அங்கஜன் இராமநாதனது அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அவருக்குப் பொன்னாடைக 18 ➤

## கொரோனாத் தொற்று சடுதியாக அதிகரிப்பு

### சாதாரணமாக கருத முடியாது என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு செப். 2

வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படுபவர்களிடமிருந்து சமூகத்தில் கொரோனா பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன் 20 ➤

## சம்பந்தன், விக்கி, கஜேந்திரகுமாரை சிறையில் அடைப்பதுதான் ஒரே வழி

### துள்ளிக்குதிக்கிறது ராஜபக்ச அரசு

கொழும்பு, செப்ரெம்பர் 2

தமிழீழ விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து அவர்களின் கொடிய பயங்கரவாதப் போராட்டத்தை நியாயப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் ஆகிய மூவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைப்பதுதான் ஒரே வழி. இவ்வாறு ராஜபக்ச அரசு தெரிவித்துள்ளது. 18 ➤

### தெல்லிப்பழை, தொல்புரத்தில்

## 10 பவுணுக்கும் அதிகமான நகைகள் திருடப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 2

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொல்புரம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குளமங்கால் பகுதிகளில் 10 பவுணுக்கும் அதிகமான நகைகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 14 ➤

### வடக்கு, கிழக்கு தவிர்ந்த

## ஏனைய மாகாணங்களில் 1 லட்சம் வேலை வாய்ப்பு வழங்கல் ஆரம்பம்

கொழும்பு, செப். 2

வறுமையை ஒழிப்பதற்காக குறைந்த வருமான முடையவர்களுக்கு தொழில் வழங்குதல் நிகழ்ச்சித் திட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களிலும் இன்று ஆரம்பமாகவுள்ளது. இது தொடர் 18 ➤

## மீண்டும் குருதி ஆறு ஓட விரும்புகின்றாரா விக்கி?

### கேள்வி எழுப்புகின்றார் எல்லாவல மேதானந்த தேரர்

கொழும்பு, செப். 2

இலங்கையில் மீண்டும் குருதி ஆறு ஓட வேண்டும் என்ற நினைப்பில்தான் விக்னேஸ்வரன் அரசமைப்புக்கு முரணான வகையில் புலம்பி வருகின்றார். இவ்வாறு கிழக்கு மாகாண தொல்பொருள் தொடர் 18 ➤

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், செப். 2

ஏ-9 நெடுஞ்சாலையில் கைதடி குட்டிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாகவுள்ள வளைவில் மோட்டார் சைக்கிள்விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவம 14 ➤

### போராட்டத்தை குழப்பியமைக்கு

## சப்பைக்கட்டு காரணம் கூறுகிறது முன்னணி

### மணிவண்ணன் விடயத்திலும் சளாப்பல் பதில்கள்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாண நகரில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குழப்பியடித்திருந்த நிலையில் அது தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் 18 ➤

## புத்தர் இந்துவாக பிறந்தார்: இதைச் சொல்வது தவறா?

### தேர்தலுக்காக மக்களை தூண்டவில்லை என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 2

மாகாணசபை தேர்தலை இலக்கு வைத்து தமிழ் மக்களை நான் 20 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
011 200 88 88
செலான் தங்கக் கடன்
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தந்தம், வாள், ஹெரோய்ன் நாவாந்துறையில் மீட்பு

## சந்தேகத்தில் 14 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 2

நாவாந்துறையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுக் காலை நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது 14 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் யானை தந்தம், வாள், ஹேரோய்ன் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

சுற்றிவளைப்பு தேடுதலின் போது சந்தேகத்தில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தந்தத்தை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கூரிய வாள் ஒன்றை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.5,20)

## அமெரிக்கத் தடை:

# துறைமுக நகரை நிர்மாணிக்கும் சீன நிறுவனத்துக்கும் சிக்கல்!

கொழும்பு, செப். 2

தென்சீனக் கடலில் செயற்கைத் தீவை உருவாக்கி இராணுவ மயமாக்கலுக்கு உதவிய குற்றச்சாட்டில் 24 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள தடைக்கு இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் அமெரிக்க அரசைக் கண்டித்துள்ளது.

தடையை எதிர்கொள்ளும் 24 சீன நிறுவனங்களில் கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள சீனா ஹாா்பர் இன்ஜினியரிங் கம்பெனியின் தாய் நிறுவனமான சீனா கொம்யூனிகேசன்ஸ் கென்ஸ்ட்ரக்சன் கம்பெனியும் உள்ளடங்குகிறது.

இந்த நிறுவனமே அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்றவற்றையும் அமைத்திருந்தது.

கொழும்பிலுள்ள தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் இந்தத் தடைகள் முற்றிலும் உண்மைக்கு எதிரானவை மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் விதி முறைகளை மீறுவதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவின் இந்த அறிவிப்பை சீனா கடுமையாக எதிர்த்தது என்றும், இந்த அறிவிப்பை அமெரிக்கா உடனடியாக மீள்ப்பெற வேண்டும் எனவும் சீனாவின் உள் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துமாறும் வலியுறுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அண்மைக் காலமாக அமெரிக்கா பேச்சுக்களைக் கைவிட்டு வருவதாகவும் சீனா, இலங்கை உட்பட்ட பல நட்பு நாடுகள் மீது ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், உள் விவகாரங்களில் கடுமையாகத் தலையிடு வதை ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா நெருக்கடி உள்ளிட்ட சவால்களை அமெரிக்கா எதிர்கொள்கின்ற நிலையில் அமெரிக்க நிர்வாகம் அதன் உள் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சுமார் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் துருப்புக்களை வெளிநாடுகளில் நிறுத்துவதன் மூலமும், இதற்காக ஆண்டுதோறும் 100 பில்லியன் டொலருக்கும் அதிகமாக செலவழிப்பதன் மூலமும் உலகத்தையும் பிராந்தியத்தையும் இராணுவமயமாக்குவது அமெரிக்கா தான்.

அமெரிக்காவிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள தென் சீனக் கடல் பகுதிக்கு போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை அனுப்பி தனது சக்தியை வெளிப்படுத்தவும், இராணுவ ஆத்திரமூட்டல்களில் ஈடுபட்டு பிராந்திய நாடுகளின் இறையாண்மையையும் பாதுகாப்பு நலன்களையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

# இருண்டு கிடக்கும் அரசியல்வானில் சிறியதொரு ஒளிக்கீற்று தெரிகின்றது

## விக்கியை மெச்சி சிலாகிக்கிறார் சிறீகாந்தா



யாழ்ப்பாணம், செப். 2

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரோ தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் சார்பில் தமக்கு சரியெனப்பட்டதை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் துணிந்து பேச ஒருபோதும் தயங்க வேண்டியதில்லை. அக்னியின் பரீட்சை தான் உன்னதமான உருக்கினை உருவாக்குகின்றது என்ற பொன்மொழி அரசியலுக்கும் பொருந்தும். இன்று தமிழினத்திற்குத் தேவைப்படுவது நிமிர்ந்து நின்று எமது மக்களுக்காக நீதி கோரி குரல் எழுப்பக்கூடிய துணிவு கொண்ட நேர்மையான அரசியற் தலைமை.**

எமது அரசியல் வானம் இருண்டு கிடந்தாலும் ஒரு சிறிய ஒளிக்கீற்று எங்கோ தூரத்தில் தெரிகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் என்.சிறீகாந்தா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விக்கினேஸ்வரனின் உரைகள் கடந்த சில நாள்களாக ஓர் சர்ச்சையின் மையப்பொருளாக சிங்கள தீவிரவாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் உருமாற்றப்பட்டுள்ளன.

### அடங்கியிருங்கள்

ஆளும் கட்சி, எதிர்க்ட்சி என்ற வேறுபாடு இன்றி, மிரட்டலும் சண்டித்தனமும் நிறைந்த தொனியில், இந்த இரண்டு தரப்பிலிருந்தும் ஆத்திரத்தை வெளிப்படுத்தும் ஆக்ரோசப் பேச்சுகள்நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்றால், இவை அனைத்தும் தமிழ் மக்களுக்கும், அவர்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பிரதிநிதிகளுக்கும் ஒரு அரசியல் செய்தியை திட்டவட்டமாக சொல்லிவைக்க முயன்றிருக்கின்றன.

'பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள்எமது சிங்கள மக்களிடம் தான் ஆட்சி அதிகாரம் இருக்கின்றது எனவே, தமிழ்ப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் அடக்கி வாசிக்க வேண்டும். கடந்தசிலவருடங்களாக நாடாளுமன்றம் சந்தித்த மென்மையானதும் குழைவானதுமான சமரசப் பேச்சுக்களுக்கு மாறாக, தமிழர் தரப்பிலிருந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எவராவது, வரலாற்றைச் சுட்டிக்காட்டி சுயநிர்ணயஉரிமைபற்றியெல்லாம் பேச முயன்றால், அவற்றை சகித்துக் கொள்ள இயலாது, அப்படிப்பட்டவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கமுடியாது. அவர்களின் நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தெரிவு செய்த மக்களும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்' என்ற தோரணையில் ஓர் அரசியல் அராஜகமே அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

### சரத்தும், சஜித்தும்

களேபரத்தில் முன்னணியில் நிற்கும் நான்கு ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர், முன்னாள் கடற்படை அட்மிரல் சரத் வீரசேகரவின் நடத்தை ஆச்சரியத்திற்கு உரியதல்ல. அவரைப் போன்ற சிங்கள தேசபக்தரிடமிருந்து வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

அதே நேரத்தில் 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தான் யார் என்பதை தமிழ் மக்களுக்கு தெட்டத் தெளிவாக ஞாபகப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில், வாய் திறந்து பேசாமலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் மிக முக்கியமான சூத்திரதாரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச. அவரும் சரத் பொன்சேகாவைப் போலவே, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர். அதற்கு நன்றிக்கடனாக, அவரின் தலைமைத்துவத்தின் கீழ், அவரின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் விக்னேஸ்வரனின் பேச்சை கையில் எடுத்திருக்கின்றார்கள்.

### கௌரவத் தோல்வி

2010 இலும் 2019இலும் முறையே இந்த இரண்டு சிங்கள அரசியல்வாதிகளுக்கும், அவரவர் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் கொடுத்த பேராதரவு வெறும் செல்லாக் காசு என இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அளித்த எதிர்மறையான வாக்குகள் தான், சரத்பொன்சேகாவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் கிடைத்த தோல்விகளில் கூட, ஓர் மரியாதையை இணைத்திருந்தன என்பதை நினைத்துப் பார்க்கக் கூட இந்த இருவரும் இப்பொழுது தயாராக இல்லை.

கிடைக்கும் அடுத்த சந்தர்ப்பத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கான இவர்களின் நெடுந்தூரக் கனவில், தமிழர் வாக்குகள் எந்த நிலையிலும் தமக்குத் தான் என்கிற அறிவீனத்தோடு கூடிய மமதை மிளிர்ந்து நிற்கின்றது.

தவிர்க்கப்பட முடியாத அரசியல் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலொழிய, சிங்கள பௌத்த அரசியல் சக்திகளுக்கிடையிலான அதிகாரப் போட்டியில் சம்பந்தப்படுவதால், தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும், நன்றி உட்பட, கிட்டப்போவதில்லை என்பது தான் அந்த உண்மை.

அரச தரப்பைப் பொறுத்தமட்டில், பிரதமர் மகிந்த ராஜபக்சவின் அனுமதியின்றி அமைச்சர் சரத் வீரசேகர சீறி எழுந்திருக்க முடியாது. இங்கேயும் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மை ஒன்று உறுத்தி நிற்கின்றது.

### அமைதியாகவிருந்த தமிழ் எம்.பிக்கள்

எதிரும் புதிருமான இந்த இரண்டு தரப்புமே, இந்த நாட்டின் குடிமக்களான தமிழ் மக்களின் சார்பில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் எழுப்பிய உரிமைக் குரலை அடக்கி ஒடுக்குவதில் கரங்கோர்த்து நிற்கின்றன இது ஓர் புதிய வரலாற்றுக்கான அறிகுறி என்று கூடச் சொல்ல முடியும்.

அபூர்வமான ஒற்றுமையுடன் சிங்கள இனவாதிகள் கர்ஜித்த நேரத்தில் தமிழர் தரப்பு என்ன செய்து கொண்டிருந்தது என்ற கேள்வியையும் சோகத்துடன் எழுப்பவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமைதான் இப்போதுள்ளது.

ஒரே ஒரு செல்வம் அடைக்கலநாதனைத் தவிர, வேறு எந்தத் தமிழன் அந்த அரங்கில் அன்று துணிந்து பேசினான்? தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்கள். ஆனால், எத்தனை தமிழர்களின் தசைகள் அன்று எங்கே ஆடின?

கௌரவர் சபையில், பஞ்சபாண்டவர் முன்னிலையில், பாஞ்சாலியின் துகில் உரியப்பட்ட கொடிய சம்பவம் தான் ஏனோ நினைவுக்கு வருகின்றது, என்றுள்ளது. (ஒ-5-26)

# நாடாளுமன்ற உறுப்பினரை தீர்மானிக்கவுள்ள நாணயம்

## பிரேமலால் விவகாரத்தால் ஏற்பட்டுள்ள சுவாரஸ்சியம்

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள பிரேமலால் ஜெயசேகர, நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழந்தால் இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக நாணயச் சுழற்சியின் மூலம் நாடாளுமன்றஉறுப்பினர் தெரிந்தெடுக்கப்படுவார்.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு, மாவட்டத்தின் விருப்பு வாக்கில் இரண்டாவது இடத்தைப் பெற்று பிரேமலால் ஜெயசேகர வெற்றி பெற்றார். ஆனால் அவர் கொலை வழக்கு ஒன்றில் குற்றவாளியாக நீதிமன்றால் இனங்காணப்பட்டு தூக்குக் தண்டனை விதிக்கப்பட்ட கைதியாவார். அவர் தற்போது மேன்முறையீடு செய்துள்ளார்.

அவர் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கவோ அல்லது வாக்களிக்கவோ முடியாது என்று சட்டமா அதிபர் நாடாளுமன்றப் பொதுச் செயலர் மற்றும் நீதி அமைச்சுக்கு அறிவித்திருந்தார்.

பிரேமலால் ஜெயசேகர தனது நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழந்தால் அடுத்து விருப்பு வாக்குகள் பெற்றவரே தெரிவு நாடாளுமன்றத்துச் செய்யப்படுவர்.

இதில் சுவாரசியம் என்னவெனில் பிரேமலால் ஜெயசேகரவுக்கு அடுத்த நிலையில் இருவர் சம அளவிலான வாக்குகளைப் பெற்றுள்ளனர். ரஞ்சித் பண்டார மற்றும் சன்னி ரோஹன கொடித்துவக்கு ஆகிய இருவரும் 53 ஆயிரத்து 261 வாக்குகளைப்பெற்றுள்ளனர். அதனால் நாணயச்சுழற்சி மூலமே ஒருவரைத் தேர்ந்தெடுக்க நேரிடும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# வேலைவாய்ப்பில் வடக்கு, கிழக்கை அரசு ஒருபோதும் புறக்கணிக்காது

## மஸ்தான் எம்.பி. உறுதி

வவுனியா, செப். 2

**துரித அபிவிருத்தியை நோக்கி வேகமாகப் பயணிக்கும் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வசிப்பவர்களுக்கான ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்கும் செயற்றிட்டத்தில் எக் காரணம் கொண்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்படமாட்டா என நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார்- முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கள் எனும் இலக்கு மிகப் பெரியது. இதனை ஒரே இரவில் ஒரேயடியாகச் செய்துவிட முடியாது. இப் பெரிய செயற்றிட்டத்தைக் கட்டங்கட்டமாக முன்னெடுக்க வேண்டும். அந்த வகையில் எமது வடக்கு மாகாணம் அடுத்த கட்டங்களிலே நிச்சயமாக உள்வாங்கப்படும். இதற்கிடையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வங்குரோத்து அரசியல்வாதிகள் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களில் அரசு வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் புறக்கணித்து விட்டதாகப் பொய்ப் பிரசாரங்களைப் பரப்பிக்கொண்டு அரசை மலினப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களின் உரிய மாவட்டங்களின் ஆளும்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக இந்த வேலைவாய்ப்புகளை வழங்க அரசு தீர்க்கமாக முடிவெடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்திலேயே இவ்வாறான் பிரசாரங்களை இவர்கள் கட்டவிழ்த்துள்ளனர். நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக மதித்தே எமது அரசு செயற்பட்டு வருகின்றது என்றுள்ளது. (ப-110)

# பட்டதாரிகளின் ஆவணங்கள் சரிபார்ப்பு இன்று ஆரம்பம்

வேலைவாய்ப்பற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளபட்டதாரிகள் தமக்குரிய பிரதேச செயலகங்களில் இன்று முதல் கடமைகளைப் பொறுப்பேற்க முடியும். பிரதேச செயலகங்களில் பட்டதாரிகளின் ஆவணங்கள் இன்றைய தினம் சரிபார்க்கப்படவுள்ளன. குறிப்பாக பட்டத்தைப் பூர்த்தி செய்த திகதி, துறை, எந்தப் பல்கலைக்கழகம் என்ற விவரங்கள் பார்க்கப்படவுள்ளன.

இதேவேளை பட்டதாரிகளுக்கான இராணுவத்தினரின் கட்டாய பயிற்சி 21 நாள்கள் நடத்தப்படவுள்ளன என்பதுடன், தெரிவு செய்யப்பட்டுள்ளபட்டதாரிகளின் விவரத்தை இராணுவத்தினர் பெற்றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# 10 ஆண்டுகள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை

## எக்னலிகொடவின் மனைவி ஆதங்கம்

கொழும்பு, செப்.2



பிரபல கேலிச்சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு இதுவரை 10 ஆண்டுகள் கடந்த போதிலும் நீதி மன்றத்தில் இதுவரை நீதி கிடைக்காமையிட்டு கவலையடைகிறேன் என அவரது மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

பிரகீத் எங்கோ ஓரிடத்தில் உயிரோடு இருக்கிறார் என்று நான் அன்றும் கூறினேன். இன்றும் அந்த நம்பிக்கையுடன்தான் இருக்கிறேன். அவரை நான் உயிர்வாழ வைத்துக்கொண்டிருக்கிறேன். பிரகீத் காணாமலாக்கப்பட்ட சம்பவத்தை காணாமல் போகவிடாமல் பார்த்துக்கொள்வதுதான் எனது ஒரே இலக்கு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கார்ட்டூன்கள் வரைவதற்காக பிரகீத் எக்னலிகொட பயன்படுத்திய பொருள்களையும், நீரிழிவு நோய்க்காக அவர் எடுத்துக்கொண்ட மருந்துகளையும் தற்போதுவரை பிரகீத் எக்னலிகொடவின் நினைவுகளாக சந்தியா பாதுகாத்து வருகிறார். (ப-இ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.2

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கேரளக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸ ஸ்ரீ தர்மாராம வீதிக்கு அண்மித்த பகுதிகளில் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் சிறப்புத் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அதில் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த 5 இலட்சம் ரூபா பெறுமதியான 2 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும், ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை, ஸ்ரீ தர்மராம வீதியைச் சேர்ந்த 26 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

# அம்பாந்தோட்டையில் ரஷ்யாவின் போர்க் கப்பல்கள்

கொழும்பு, செப்.2

ரஷ்யாவின் மூன்று போர்க் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது இக் கப்பல்கள் அந்தத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

அட்மிரல் ட்ரிபக், அட்மிரல் வினோக்ர்டேவ் மற்றும் பொரிஸ் புடோமா என்ற கப்பல்களே இவ்வாறு வந்துள்ளன.

ஊழியர்களுக்காக ஓய்வு மற்றும் எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகளுக்காகவே இங்கு வந்துள்ளன எனவும் நாளை மறுதினம் கப்பல்கள் மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் எனவும் இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ப-இ)

# விக்னேஸ்வரனின் கருத்துக்களை நீக்கும் உரிமை யாருக்கும் இல்லை

## ஆதரவுக் கரம் நீட்டினார் அமைச்சர் வாசுதேவ

கொழும்பு, செப். 2

விக்னேஸ்வரனின் கருத்துக்களை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்குமாறு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை. அதற்காக அவரது நிலைப்பாட்டுக்கு இணங்கவேண்டிய தேவையும் இல்லை என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்ற உறுப்பினர் சீ.வி. விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து, அவரது தனிப்பட்ட நிலைப்பாடு. அதனைத் தெரிவிப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கின்றது. அதனைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. சபாநாயகரும் அதற்கு அனுமதி வழங்கி இருந்தார்.



விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் நாடாளுமன்றப் பதிவேட்டு அறிக்கையில் பதிவாகி இருக்கின்றது. அதனை அதிலிருந்து நீங்குமாறு தெரிவிக்க யாருக்கும் உரிமை இல்லை. அத்துடன் விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கு அனைவரும் இணங்கவேண்டும் என்றில்லை -என்றார். (ப-இ)

# அரசமைப்பு உருவாக்க சு.கட்சி ஒத்துழைப்பு

கொழும்பு, செப்.2

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுதந்திரக் கட்சியின் 69ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மத வழிபாடுகள் பெல்லன்வில ரஜமஹா விகாரையில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## விக்ரமரத்னவுக்கு ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, செப்.2
அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நாளை முன்னிலையாகுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ர மரத்னவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுக் கள் மற்றும் நீதித்துறை மற்றும் பொலிஸ் துறை மீதான தலையீடுகள் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழு ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷ வால் உருவாக்கப்பட்டது.

கடந்த ஆட்சியில் நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள், நீதித்துறை மற்றும் பொலிஸ் துறை மீதான தலையீடுகள் தொடர்பாக அந்த ஆணைக் குழு விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றது. (எ-இ)

# நாட்டில் கடும் வெப்பம்: சிறுவர்களுக்கு பாதிப்பு

## குழந்தை நல மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு, செப்.2
நாட்டில் தற்போது கடும் வெப்பமான காலநிலை காணப்படுவதால், சிறார்களுக்கு வெப்ப அழற்ச்சி நிலைமைகள் ஏற்படலாம். அதனால் சிறார்களுக்கு அதிகளவு நீர் வழங்க வேண்டும் என்று குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது
நீர் சத்துக்கள் அதிகமாக உள்ள உணவுகளை உண்பதற்கும் தினமும் குளிப்பதற்குப் பிள்ளைகளை பழக்க வேண்டும். வெயிலில் அதிக நேரம் இருப்பதற்கு அனுமதிக்க வேண்டாம்.

அதிக வெப்பம் காரணமாக அரிப்பு, தோல் அழற்ச்சி, தடிப்புகள் மற்றும் கொப்பளங்கள் போன்ற தோல் நோய்கள் ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சூழலில் அதிகப்படியான தூசி காரணமாக குழந்தைகளுக்கு பாதிப்புகள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். முடிந்தவரை முகக் கவசம் அணிவது நல்லது- என்றார். (எ-இ)

## சட்டமா அதிபரை சீண்டும் வாசுதேவ

கொழும்பு, செப்.2
பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்றத்திற்கு நுழைவாரா? இல்லையா? என்பதை நாடாளுமன்றமும் சபாநாயகருமே தீர்மானிக்க வேண்டும். அதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு இல்லை.

இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்ய அழைத்து வருமாறு சபாநாயகரால் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வது தொடர்பாகவும், வாக்களிப்புக்களில் பங்குபற்றுவது தொடர்பாகவும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் நீதி அமைச்சால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

அதற்கமைய, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றவும், வாக்களிப்பில் கலந்து கொள்ளவும் முடியாது என சட்டமா அதிபர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு இல்லை என்று மஹிந்த அணியைச் சேர்ந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (எ-இ)

## பிற இனங்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசு

### குற்றஞ்சாட்டுகிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், செப்.2
பிற இனங்களின் அடையாளத்துக்கும், இருப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துவது தான் ராஜபக் ஷ அரசின் நோக்கமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பெரும் அமைச்சர் பட்டாளத்தை உருவாக்கியுள்ள ராஜபக்ச அரசு, இந்து மத விவகாரம், அரச கரும மொழிகள் அமுலாக்கம், இனங்களிடையேயான நல்லிணக்கம் ஆகிய அமைச்சுக்களை இல்லாது செய்துள்ளது.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிரேம ச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக் கையில் உள்ளதாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி தமிழ் மொழி அரச கரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பல்வேறு திணைக்களங்களிலும், அமைச்சுக்களிலும் இன்னமும் தனிச் சிங்களத்திலேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மை.

கடந்த அரசில் பெயரளவுக்காவது நல்லிணக்க அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அதுகூடத் தற்போது இல்லாது ஆக்கப்பட்டுள்ளது. இந்து சமய கலாசார அமைச்சோ, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்கள் தொடர்பான அமைச்சோ உருவாக்கப்படவில்லை. இது இந்த அரசின் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

ஒரே நாடு, ஒரே சட்டம் என்று பேசுபவர்கள் இந்த நாட்டில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன, அவர்களுக்கு மத, கலாசார, பண்பாட்டு அடையாளங்கள் இருக்கின்றன, அந்த மக்களுக்கு பாரம்பரியமான தேசவழமைச் சட்டங்களும், மத விழுமியங்களைக் காப்பதற்கான சட்ட திட்டங்கள் உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அவற்றைப் பாதுகாக்கவே பல லட்சம் பேரை இழந்து அவர்கள் போராடியுள்ளனர் என்பதை மறந்து எதேச்சதிகாரமாக நடப்பது இந்த நாட்டில் இனங்களிடையே மேலும் விரிசலையே ஏற்படுத்தும் - என்றுள்ளது. (எ)

## கட்சித் தலைமைக்கு வஜிரவும் விருப்பம்!

கொழும்பு, செப்.2
ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தக் கூடிய தகுதி தன்னிடம் உள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.



கண்டியில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியுடனான எனது 38 ஆண்டு கால அரசியல் அனுபவம் கட்சிக்கும் நன்மையாக இருக்கும்.

கட்சியின் தலைவரும், செயற்குழுவும் என்னைத் தலைமைப் பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருக்கின்றேன்- என்றார். (எ-இ)

## வலுவான சக்தியாக மாறியுள்ளது பெரமுன

*அமைச்சர் பீரிஸ் பாராட்டு*

கொழும்பு, செப்.2
பொதுஜன பெரமுன நாட்டின் அரசியலில் வலுவான சக்தியாக மாறியுள்ளது. பசில் ராஜபக்ஷ பெரும்பான்மை அதிகாரத்தின் மூலம் கட்சிக்கு மகத்தான வெற்றியை ஈட்டித்தந்துள்ளார் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
20ஆவது அரசமைப்புத் திருத்தம் வரவு - செலவுத்திட்டத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பொதுஜன பெரமுன நாட்டின் அரசியலில் வலுவான சக்தியாக மாறியுள்ளது. நாட்டின் சகல பகுதிகளிலும் அதிகாரத்தைக் கைப்பற்றி பெரமுனவை அனைத்து மக்களின் கட்சியாக மாற்றுவது கட்சியின் இலக்காகும்-என்றார். (ப-இ)

# பதவி ஆசை இல்லை

## கரு விளக்கம்

என் மீது நம்பிக்கை வைத்தவர்கள் விடுத்த அழைப்புக்கு அமையவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்பதாக அறிவித்தேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் சபாநாயகரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினருமான கரு ஜயசூரிய.

நேற்று அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீட மகாநாயக்க தேரர்களைச் சந்திக்க கண்டி சென்ற அவர், அங்கு ஆசி பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நீண்ட வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இப்போது பின்னடைவைச் சந்தித்திருப்பது தொடர்பாகக் கவலையடைகின்றோம். மகாநாயக்க தேரர்களும் இது தொடர்பான தங்கள் கவலையைத் தெரிவித்தனர்.

கட்சித் தலைமைத்துவத்தை ஏற்குமாறு எதிர்பாராத தரப்புகளில் இருந்து கூட எனக்கு கோரிக்கைகள் வந்தன. அந்தநேரத்தில் கட்சித் தலைமைத்துவத்தில் இருந்து விலகுவதாக ரணிலும் தெரிவித்திருந்ததால், தலைமைத்துவச் சவாலை ஏற்கத் தயார் என்ற அறிவிப்பை நான் வெளியிட்டேன்.



அதைச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டனர். எனது அறிவிப்பு தற்போதைய கட்சித் தலைமைத்துவத்துக்கு எதிரான அச்சுறுத்தல் என்று கூறுகின்றனர். அது தவறாகும்- என்றார். (எ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணாமல்போன ஆடும் மனம்திருந்தும் பாவியும்

ஒரு பண்ணையாளரிடம் 100 ஆடுகள் இருந்தன. அவற்றில் ஓர் ஆடு காணாமல் போய்விட்டால் அந்தப் பண்ணையாளர் தன்னிடம் 99 ஆடுகள் எஞ்சியுள்ளன என்று திருப்திப்படமாட்டார். மாறாக காணாமல்போன அந்த ஓர் ஆடு எங்கே என்று தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில்தான் ஈடுபடுவார். அதேபோல்தான் நீதிவான்கள் 99 பேரைவிட மனம் மாறும் ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் உண்டாகும் மகிழ்ச்சி அளப்பரியது என்கின்றது கத்தோலிக்கர்களின் புனித நூலான திருவிவிலியம். இன்று இதே விடயத்தைக் கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் இலங்கைத் தமிழர்கள் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கையில் உள்ள இனம் மற்றும் மொழிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளையும் தடைசெய்ய வேண்டும். பிரச்சினைகள் எவ்வளவோ இருக்க எந்த மொழி மூத்த மொழி என்று பேசிக் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றோம் என்று நொந்துகொண்டுள்ளார் கர்தினால் மல்கம் ரஞ்சித். கர்தினால் ராஜபக்ஷக்களின் கைக்கூலியாகச் செயற்படுகின்றார் என்று அவர்மீது கொட்டிக்கிடக்கும் விமர்சனங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. அவரின் கடந்தகால மற்றும் நிகழ்காலச் செயற்பாடுகளும் அதையே கட்டியம் சொல்லுகின்றன. அத்துடன் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள்தான் தற்போது மூத்த மொழி எதுவென்ற சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இவ்வாறிருக்கையில் கர்தினாலின் இந்த கருத்தானது அவரை கத்தோலிக்கம் சார்ந்த தலைவராக அல்லாமல் ஒரு சிங்களத் தலைவராகவே மீண்டும் அடையாளப்படுத்தி நிற்கின்றது.

இனம் மற்றும் மொழிசார் கட்சிகள் இருப்பது தம் பின்புலத்தை தம்பட்டம் அடிப்பதற்காக அல்ல. தாம் சார்ந்த – தம் மக்கள் சார்ந்த பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்காகவே. இவ்வாறிருக்கையில் அந்தக் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று கர்தினால் விடுத்துள்ள கோரிக்கை எந்த வகையறா என்று புரியவில்லை. அத்துடன் அவரின் அறிவிப்பை சிறுபான்மை மக்கள் மீதான அடக்குமுறைக்கு ஓர் உந்துசக்தியாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறுபான்மை மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் இனம், மொழியைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியினரே.

தன் கோரிக்கையின் ஒரு பகுதியில், 'ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விரைந்து விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்' என்றும் கர்தினால் குறிப்பிட்டுள்ளார். நிச்சயம் இதற்கு மாற்றுக் கருத்தில்லை. அந்தக் கோரத்தாண்டவத்தை மேற்கொண்டவர்களுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அனைவரதும் விருப்பம். ஆனால், சில நூறு பேரைக் காவுகொண்ட ஈஸ்டர் தாக்குதலின் மட்டில் தனக்கிருக்கும் வலியில் பாதியையேனும் பல லட்சம் பேரைக் காவுகொண்ட ஈழத்தின் இறுதிப்போரின் மட்டில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிப்படுத்தாமை பெரும் அபத்தமே.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படும்போது 'ஏலி ஏலி லாமா செபக்தானி?' என்று உரத்துக் குரலெழுப்பினார். இதன் அர்த்தம் 'என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்பதாகும். இதே வார்த்தைகளைத்தான் கர்தினாலை நோக்கி ஈழத்துத் தமிழ் மக்களும் உரைக்க வேண்டியிருக்கின்றது. 'ஏலி ஏலி லாமா செபக்தானி?' 'என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் (எம்மைக்) கைவிட்டீர்?'.

## 'ஒரே நாடு ஒரே சட்டம்'

# 13 இல் கை வைத்தாலே சாத்தியப்பட வாய்ப்பு!

### ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு, செப். 2**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்தார்.**

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு காலமெடுக்கும் என அரசாங்கம் கருதும் பட்சத்தில் இதற்கான ஏற்பாடுகள் '20'ஆவது திருத்தச் சட்டத்தின்மூலம் மேற்கொள்ளலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், 16ஆவது திருத்தச்சட்டம் மற்றும் தேர்தல் முறை ஆகியவற்றிலுள்ள நாட்டுக்குப் பொருந்தாத அதேபோல் தீங்கு விளைவிக்கக்கூடிய விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் ஆணை வழங்கினர்.

ஜனாதிபதியும், பிரதமரும் வெவ்வேறான கட்சிகளை சார்ந்தவர்களாக இருந்தபோதே 19 ஆவதுதிருத்தச்சட்டம் நாட்டை நிர்வகிப்பதற்குத் தடையாக இருந்தது. தற்போது அண்ணனும், தம்பியுமே இவ்விரு பதவிகளை வகிக்கின்றனர். எனவே, 19 சிக்கலாக அமையாது. எனினும், அது மறுசீரமைக்கப்படவேண்டும். ஆனால் 19க்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைவிடவும் 13க்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதே ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றது. அதனை நடைமுறைச் சாத்தியமான விடயமாக மாற்றியமைக்க வேண்டும். 13இனை மாற்றியமைக்காமல் இது சாத்தியப்படுமா என்ற கேள்வியும் எழுகின்றது. ஏனெனில் தமது ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட பகுதிக்குத் தேவையான சட்டம் இயற்றும் அதிகாரம் மாகாண சபைக்கு இருக்கின்றது. எனவே, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதியின் கொள்கையுடன் இவ் விடயம் ஒத்துப் போகவில்லை. அடுத்ததாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் சட்டம், ஒழுங்கு என்பது மாகாணப் பட்டியலில் உள்ளது. இதன்படி முதலமைச்சரின்கீழ் இயங்கும் பொலிஸொன்றை உருவாக்கலாம். இந்நிலைமையை மாற்றாமல் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பொலிஸ் அதிகாரத்தை பெறுவதற்கு முயற்சிக்கப்படலாம். விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார், சுமந்திரன் ஆகியோரின் அண்மைக்கால அறிவிப்புகள் இதனையே வெளிப்படுத்தின. அதேவேளை, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு காலமெடுக்கும் என அரசாங்கம் கருதுமானால் அதற்கு முன்னர் 20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 13 இனை மாற்றியமைக்கலாம். இதன்படி மாகாண சபைக்கான சட்டம் இயற்றும் அதிகாரம், வடக்கு கிழக்கு இணைப்பு, ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையை உருவாக்கும் அதிகாரம் ஆகிய சரத்துகளை நீக்கவேண்டும். ஒருவசனத்தின் ஊடாக இதனைச் செய்யலாம்' - என்றார். (ம-44)

# டக்ளஸுடன் என்னை கோர்த்து விடுகின்றனர்

### சிக்கமாட்டேன் என்கிறார் அங்கஜன் எம்.பி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவ்வயும் என்னையும் சிலர் கோர்த்துவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு கோர்த்து விடுவதால் நான் சிக்கமாட்டேன், வேறு யாரும் சிக்கினால் அதற்கு நான் பொறுப்பு அல்லன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரின் அலுவலகத் திறப்பு விழாவின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், தங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது அது தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அவர்:

எனக்கு அப்படியொரு பிரச்சினையும் இல்லை. பிரச்சினையாக இருப்பவர்களிடம்தான் அதைக் கேட்கவேண்டும். என்னுடைய வேலையை, எனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நான் சரியாகச் செய்வேன். ஏனையவர்களும் அதைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் எங்களுக்கிடையில் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு பலர் எங்களைக் கோர்த்து விடக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த முயற்சியில் நான் மாட்டமாட்டேன், வேறு யாரும் மாட்டினால் நான் பொறுப்பல்லன் - என்றார். (ப-21)

# கடந்த மாதம் மட்டும் 671 அழைப்புக்கள்!

கொழும்பு, செப்.2

பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவோரின் சொத்து விவரங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு கடந்த மாதம் மட்டும் 671 அழைப்புகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் சொத்து விவரங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 1917 என்ற இலக்கமொன்று கடந்த மாதம் அறிமுகப் படுத்தப்பட்டது.

கிடைத்த முறைப்பாடுகளில் 110 முறைப்பாடுகள் பண மோசடியுடன் தொடர்புடையவை என்று பொலிஸ் சட்டப்பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ்துறை அதிகாரி ருவான் குணசேகர நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (எ-இ)

# குருவிக்காட்டில் குவியும் மருத்துவக் கழிவுகள்

## சுகாதாரச் சீர்கேட்டுக்கு வாய்ப்பு

**சாவகச்சேரி,செப்.2**
**சரசாலை வடக்கு குருவிக்காடு பகுதியில் தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்திய, கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படலாம் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.**

சாவகச்சேரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் கடந்த வாரம் இங்கு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வாகனங்களில் கொண்டு வரப்பட்டு கொட்டப்பட்டிருந்த பெருமளவு கழிவுப் பொருள்கள் பிரதேச சபை வாகனங்களில் அப்புறப்படுத்தப்பட்டன.

அங்கு கழிவுப் பொருள்களுடன், மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மருத்துவமனைகளில் பயன்படுத்தும் மருத்துவப் பொருள்களும், அங்கு பயன்படுத்திய கழிவுப் பொருள்களும் நிறையக் காணப்பட்டன.

இவை தனியார் மருத்துவமனைகளில் மட்டும் பாவிக்கப்படும் மருந்துகள் என சுகாதார மருத்துவ அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் மருத்துவமனைகளில் பயன்படுத்தும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் கழிவுகள் தீயிட்டு எரிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் தனியார் மருத்துவமனையினர் கழிவுப் பொருள்களை அங்கு கொட்டியுள்ளனர்.

மருத்துவ உபகரணங்களில் மற்றும் கழிவுகளிலிருந்து எழும் நச்சுத்தன்மை, வீதியில் செல்லும் பொதுமக்களுக்கு தாக்கத்தைக் கொடுக்கும் என்பதால், மருத்துவமனை வளாகத்தில் எரிக்குமாறு சுகாதார மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார்.

கடந்த வாரம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்ட பின்னர், பொதுமக்கள் கழிவுகள் கொட்டுவதை நிறுத்தியுள்ளனர்.

எனினும் மருத்துவமனையின் கழிவுகள் மீண்டும் கொட்டப்பட்டுள்ளதென பொதுமக்கள் தெரிவித்தனர்.

பறவைகள், சரணாலயமாக மாற்ற பிரதேச சபையினர் நடவடிக்கை மேற்கொண்டு அந்தப் பகுதியில், கழிவுகள் போடுவதற்கு தொட்டிகளை அமைத்து வழங்குவதாக சபையின் தவிசாளர் தெரிவித்துள்ள போதிலும், தனியார் மருத்துவமனையினர் தமது நிறுவனத்தில் சேரும் கழிவுகளைத் தினமும் வாகனத்தில் கொண்டு வந்து கொட்டிவிட்டுச் செல்கின்றனர் எனவும் தெரிவித்தனர். (க-9)



## புலமைப்பரிசில் வழங்கலும் அலுவலர்கள் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், செப்.2
மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கலும், அரச அலுவலர்களுக்கான கௌரவிப்பும் வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

இலங்கை நிதி அமைச்சின் கீழ் உள்ள சமூக பாதுகாப்புச் சபையின் வவுனியா மாவட்ட காரியாலயத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

மாவட்ட ரீதியில் சமூகப் பாதுகாப்பு சபையின் ஊடாக காப்புறுதி திட்டம் அமுலாக்கப்பட்டு வரும் நிலையில் இந்தத் திட்டத்தில் அதிகளவான அடைவுமட்டத்தை பெற்ற அரச அலுவலர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை 2020 ஆம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் காப்புறுதித் திட்டத்தில் பங்கேற்கும் 1,669 மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 11 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் எம் .சமன் பந்துலசேன, மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமார், வவுனியா மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேசசெயலாளர்கள், திணைக்கள அலுவலர்களும் கலந்து கொண்டனர். (ஐ-110)

## மன்னாரில் கடும் காற்று: 117 வீடுகள் சேதம்

மன்னார்,செப்.2
கடும் காற்றுடன் கூடிய மழையால், மன்னார் மாவட்டத்தில் 117 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றமன்னார் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி கனகரெத்தினம் திலீபன் தெரிவித்துள்ளார்

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மூன்று வீடுகளும், நானாட்டான் பிரதேசத்தில் 47 வீடுகளும், முசலி பிரதேசத்தில் 67 வீடுகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்றால் மரங்கள் முறிந்துள்ளன. வீடுகளின் கூரைகள் மற்றும் ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

சேத விவரங்கள் முழுமையாகக் கிடைத்ததும், இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று திலீபன் மேலும் தெரிவித்தார். (க-213)

## வீதி சீரமைப்பு ஆரம்பம்



கரணவாய்,செப்.2
பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட 9 ஆம் வட்டாரமான நாகர்கோவில் வடக்கு கௌதம்துறைபிள்ளையார் கோவில் கடற்கரை வீதியின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமாரின் ஒரு மில்லினன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதி சீரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-108)

## இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார் மஸ்தான் எம்.பி.





வவுனியா, செப்.2
வவுனியாவில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

இடர் முகாமைத்துவத்தினூடாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இழப்பீட்டை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கணேசபுரம், சமயபுரம் மற்றும் பாலைமோட்டை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் மழையுடன் கூடிய காற்றால் அப்பகுதியிலுள்ள சுமார் 40க்கு மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும், முழுமையாகவும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கழகங்களுக்கிடையில் கலந்துரையாடல்

கரணவாய்,செப்.2
கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

அதுதொடர்பில் மீளவும் விளையாட்டுக்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலே பிரதேச செயலர் இ.தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-108)





நெடுங்கேணி பட்டிகுடியிருப்பு பாவற்குளம் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# வீதிகள் அனைத்துக்கும் விடிவு நான்கு ஆண்டுகளில் பிறக்கும்

## ஜனாதிபதி உறுதி

**கொழும்பு, செப்.2**

**நாட்டின் அனைத்து வீதிகளையும் அடுத்த நான்கு வருட காலப்பகுதியில் சீரமைப்புச் செய்யவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.**

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் குறித்து விளக்கும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவிக்கு அமைச்சர்கள் அல்லாத இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருப்பது அவர்களது முழு நேரத்தையும் அதற்காகச் செலவிடுவதற்கேயாகும்.

பல மாவட்டங்களுக்கு பொதுவான மற்றும் அந்தந்த மாவட்டங்களுக்கு மட்டுமே உள்ள பிரச்சினைகளை அரசாங்கம் கண்டறிந்துள்ளது.



குடிதண்ணீர் மற்றும் நீர்ப்பாசனத் தேவைகள், நீர்ப்பாசனச் சீரமைப்பு, காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வருதல், கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளில் உள்ள குறைபாடுகளைத் துரிதமாக நிறைவேற்றுவது என்பவை அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். அதனை நிறைவேற்றுவதற்காக அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் நியமனங்களை வழங்கும் போது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களையும் நியமித்துள்ளோம் என்றார். (ஐ)

## முச்சக்கரவண்டிக்கு தீ சந்தேகத்தில் இருவர் கைது

வவுனியா, செப்.2

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு தீ வைத்தமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் முல்லைத்தீவு பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் தீயில் எரிந்துள்ளன.

தமது வாகனங்கள் தீயில் எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் தீயை அணைக்க முயன்ற நிலையில் முச்சக்கரவண்டி முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் சிறிய சேதத்துடன் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடும்ப பிரச்சனை காரணமாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலீஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (ஐ-18)

## பன்றிக்கெய்த குளத்துக்கு கிடைத்தது குடிதண்ணீர்



வவுனியா,செப்.2

பன்றிக்கெய்தகுளம் கிராமத்தின் நீண்டகால குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளது. ஆறு இலட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கப்பட்டு, மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அக் கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்களின் குடிதண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கான நிதியை தமிழ்த் திருமாதவனின் ஒழுங்கமைப்பில், டென்மார்க் அபிராமி உபாசகி வழங்கியுள்ளார். மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேன மக்கள் பாவனைக்காகத் திட்டத்தைக் கையளித்தார்.

நிகழ்வில் உதவி மாவட்டச் செயலாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (க-110)

## மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை புதிய அரசாங்கமாவது தீர்க்க வேண்டும்

மன். நேசக்கரம் பிரஜைகள் குழு கோரிக்கை

மன்னார், செப்.2


மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் அடிப்படைப் பிரச்சினைகளை புதிய அரசாங்கமாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.


மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் மாதந்த ஒன்றுகூடல் நிகழ்வில் நேற்றுக் காலை குழுவின் அலுவலகத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உப்புக்குளம், பள்ளிமுனை, சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன் நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர். இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

கிராமங்களில் ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, வீதிகள், கால்வாய்கள், தெருவிளக்குகள் வசதிகள் என்பன ஒழுங்கான முறையில் செய்து தரப்படாமை, மழைக் காலங்களின் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பது, வீட்டுத் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்புக்களில் புறக்கணிக்கப்படுவது போன்ற பல பிரச்சினைகளை அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய அவர்கள் புதிய அரசாங்கமாவது கிராம மட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மன்னார் மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர், மன்னார் நகரசபைத் தவிசாளர், ஆகியோரைச் சந்தித்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான தீர்மானமும் நேசக்கரம் பிரஜைகள் குழுவால் எடுக்கப் பட்டது. (ஐ-56)





## இரணைமடுவில் பொலிஸ் அரண்

கிளிநொச்சி, செப்.2

இரணைமடுக் குளத்தில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வைத் தடுக்க அங்கு பொலிஸ் காவலரண் ஒன்றை அமைப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரணைமடுக்குள கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் இரணைமடுக் குளத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல், கிளிநொச்சி, பொலிஸ் நிலையத்தில், தலைமைப்பீட பொலிஸ் பரிசோதகர் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் நிறைவாக இரணைமடுவில் பொலிஸ் காவல் அரண் ஒன்றை அமைத்து, பொலிஸார், நீர்ப்பாசனத் திணைக்கள, சம்மேளனப் பிரதிநிதிகள் இணைந்து அங்கு கண்காணிப்பு நடவடிக்கைளை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

காவல் அரண் அமைப்பது தொடர்பான இடங்கள் பார்வையிடப்பட்டு இறுதி முடிவுஎட்டப்பட்டது. (ஐ-222)

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.2

யாழ்ப்பாணம் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு சுருவில் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

5 பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் வடக்கின் முன்னணிக் காளைகள் பல போட்டியிடவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உதவி வழங்கும் நேர்முகத் தேர்வு



கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவி வழங்கும் செயற்றிட்டத்தில் மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வு நேற்று நடைபெற்றது.

பல்கலைகழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தங்களின் கல்வியை தொடர்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி அறக்கட்டளை புலம்பெயர் உறவுகள் மற்றும் அமைப்புகளின் நிதிப் பங்களிப்பில் உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் 2011 இற்கு பின்னர் இதுவரை கல்வி வளர்ச்சி அறக்கட்டளையிடம் 978 மாணவர்கள் உதவியைப் பெற்றுள்ளனர். இதில் 796 மாணவர்கள் தங்களது கல்வியை நிறைவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற நேர்முகத்தேர்வில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி,உப தலைவரும் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய அதிபருமான அ.பங்கையற்செல்வன்,அறக்கட்டளையின் பொருளாளரும் மாகாண கணக்காய்வுத் திணைக்கள உதவிப் பணிப்பாளருமான க. குகதாசன்,கால்நடை மருத்துவர் வெ.சகாயமேரி, விரிவுரையாளர் ம.ரஜிதன், ஆங்கில ஆசிரியர் ய.கார்த்தியாயினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-214)

# கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆபத்து

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு,செப்.2**
**கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தாமல், தளர்வுகளை அறிவிப்பது ஆபத்தான விடயம் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

கொரோனாத் வைரஸ் பரவல் ஆரம்பித்து சுமார் 9 மாதங்கள் கடந்துள்ள போதும், பல நாடுகளில் தொற்று தீவிரமடைந்தே வருகின்றது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், முதலில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் கொண்டு வந்த நாடுகள், பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு தளர்வுகளை ஏற்படுத்தின.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தாமல் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பேரழிவுக்கான செயல் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெருந்தொற்று முடிவுக்கு வந்துவிட்டதாக எந்த நாடும் கூற முடியாது.

இந்த வைரஸ் மிக எளிதாக பரவக்கூடியது. எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தாமல், தளர்வுகளை அறிவிப்பது பேரழிவுக்கான செயலாகும். மக்கள் அதிக அளவு கூடும் இடங்களில் இருந்தே பெரிய அளவில் தொற்று பரவல் ஏற்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

## பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.2
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றி தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை பதில் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## நல்லூரில் தவறவிட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம், செப்.2
நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கடவுச்சீட்டு,தே.அ.அட்டைகள்,வங்கி அட்டை மற்றும் 2 மோட்டார் சைக்கிள் திறப்புக்கள் என்பன யாழ்ப்பாண மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை இதுவரை உரிமைகோரப்படாத நிலையில் உள்ளன. இவற்றின் உரிமையாளர்கள் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நடராசா கஜீபன் (200326400473),சிவலோசனி கனகரத்தினம் (336260014OV), குலேந்திரன் கனுஸ்ரன் (200127202058) ஆகியவர்களின் தேசிய அடையாள அட்டைகளும், ரமேஸ்குமார் கார்த்திகா (796725l504V) என்பவரது கடவுச்சீட்டுமே இவ்வாறு உரிமை கோரப்படாது உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## உப்புவயல் குளம் சீரமைப்பு

வட்டுக்கோட்டை,செப்.2
யாழ்ப்பாணம் சங்கானை வட்டுக்கோட்டை மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள 'உப்பு வயல்' குளம் சீரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை தெற்கு, விவசாயிகள் சங்கம், யாழ்ப்பாணம் நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரம் மோகன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் ஆகியோரால் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டாரவிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய குளத்தின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## தோல் கிளினிக் ஆரம்பம்

பருத்தித்துறை, செப்.2
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தோல் கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை கிளினிக் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மருத்துவர் பிரசாந்தினி நேற்றுமுன்தினம் முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ-422)

## சட்டமா அதிபரின் மீளாய்வுக்கு 20ஆவது திருத்தம் சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 2
20ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்த வரைவு சட்டமா அதிபரின் மீளாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வரைவு நீதியமைச்சின் செயலர் ஊடாக தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி நிசாரா ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, 19ஆவது திருத்தத்தை நீக்கி 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவரும் சட்டவரைவுக்கான பத்திரம் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை பலவீனப்படுத்தியுள்ள 19ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கு அரசு பிரயத்தனப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## 100 மில்லிமீற்றர் மழை பதிவாகும்

கொழும்பு,செப்.2
நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா, கிழக்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும். அத்துடன், மேல், வட மேல் மற்றும் தென் மாகாணங்களில் சில பகுதிகளில், 75 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகும். வட மத்திய, வட மேல் மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் 40 கிலோமீற்றர் வரையான காற்று வீசக் கூடும். இதே வேளை, மதுரங்குளி, தலகஸ்வெவ, ஹுனுகல்லேவ, மன்னம்பிட்டிய மற்றும் கல்குடா ஆகிய பகுதிகளில், மதியம் 12.09 அளவில், சூரியன் உச்சம் கொடுக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வெவ்வேறு விபத்துக்களில் நேற்று நால்வர் காயம்

சாவகச்சேரி,செப்.2
தென்மராட்சி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 6 வயதுச்சிறுவன், 29 வயது தாய் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்றன.

மீசாலை மேற்கில் இடம்பெற்ற விபத்தில் 49 வயது குடும்பப் பெண்ணும், உசன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 19 வயது இளைஞனும், மீசாலையில் இடம்பெற்ற விபத்தில் 6 வயதுச் சிறுவனும், தாயாரும் காயமடைந்தனர். காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-9)





## கலந்துரையாடல்

முல்லைத்தீவு, செப்.2
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டு இயங்கிவரும் பொது அமைப்புகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை கண்டறியும் சிறப்புக் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் முன்னாள் பிரதியமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது. கலந்துரையாடலில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பொது அமைப்புக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்தார். (ஐ-222)

# சட்டத்துறை ஆசிரியர்கள் சேவைத் தடைக்கு எதிர்ப்பு

## ஆணைக்குழுவிடம் செல்கிறது பல்கலை. ஆசிரியர் சங்கம்

கொழும்பு, செப்.2

சட்டத்துறை ஆசிரியர்களை சட்டத்தரணியாகச் சேவையாற்ற அனுமதிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுப்பது என்று அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சட்டத்துறை ஆசிரியர்களாகப் பணியாற்றும் சட்டத்தரணிகள் தமது தனிப்பட்ட சேவையைச் செய்வதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட அனுமதியை வழங்கும் வகையில் சுற்றறிக்கை சீராக்கம் செய்யப்படவேண்டும் என்று பரிந்துரைக்கவும் அந்தச் சங்கம் முடிவெடுத்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று நேரலை காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடினர். சட்டத்துறை ஆசிரியர்கள் தமது தனிப்பட்ட சேவையை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் விதித்துள்ள தடை தொடர்பாக அதில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக் குழுவை அனைத்துப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் விரைவில் சந்திக்கவுள்ளனர்.

சட்டத்துறையில் பணியாற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் முன்னிலையாவதற்குத் தடை விதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றை கடந்த ஆண்டு இறுதியில் வெளியிட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், சட்டத்தரணியாக தனது தனிப்பட்ட சேவையை மேற்கொள்ளத் தடை விதிக்கும் வகையிலேயே இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தச் சுற்றறிக்கைக்கு எதிராகவும், தான் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவும் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. (ஏ-இ)

# நாட்டின் சர்வாதிகாரியை வீட்டுக்கு அனுப்புவோம்

## முன்னாள் எம்.பி. சத்துர தெரிவிப்பு

கொழும்பு, செப்.2



உண்மையையும், ஜனநாயகத்தையும் மூடி மறைக்க முடியாது, தற்போது நாட்டை ஆட்சி செய்யும் சர்வாதிகாரியையும் வீட்டுக்கு அனுப்புவோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,முன்னாள்அமைச்சர் ராஜித சேனாரத்னவின் புதல்வருமான சத்துர சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சாதாரணமாக உலக அரசியலில், கொள்கைக்காக உயிரைத் தியாகம் செய்து போராடுவதற்கு மனிதர்கள் என்றும் தவறுவதில்லை. அவர்களின் கொள்கைகள் மற்றும் நிலைப்பாடுகளைக் காலம் வெற்றியைக் நோக்கிக் கொண்டு செல்லும். நாடாளுமன்றத்தில் தற்போது இருப்பதை விட 161 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்துடன் எவராலும் தோற்கடிக்க முடியாது எனக் கூறிய மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்தோம். அவரது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என 589 பேரை மஹிந்த ராஜபக்ஷ விடம் இருந்து பிரித்தெடுத்தோம். அதேவிதமாகத் தற்போது நாட்டை ஆட்சி செய்யும் சர்வாதிகாரியையும் வீட்டுக்கு அனுப்புவோம் -என்றார். (ப-இ)

# சாதாரண ஒரு குழுவால் என்னை கட்சியிலிருந்து நீக்கவே முடியாது

## *கூறுகிறார் அனுசா சந்திரசேகரன்*

நுவரெலியா செப். 2

மக்கள் என்பதே மலையக மக்கள் முன்னணி, என்னைக் கட்சியைவிட்டு விலக்க சாதாரணதொரு குழுவால் தீர்மானிக்கமுடியாது என்று தெரிவித்த அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் அனுசா சந்திரசேகரன் தேசிய சபையின் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபையால் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பில் எனக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. நானும் தேசிய சபையில் அங்கம் வகிக்கின்றேன், எனது தந்தையின் ஆதரவாளர்களும் தேசிய சபையில் இருக்கின்றனர். அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. தலைமையின் முடிவுக்குக் கட்டுப்படுபவர்களுக்கு அழைப்பு விடுத்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. தனித்துவ அடையாளத்தை நிரூபிக்கும் நோக்கிலேயே பொதுத்தேர்தலில் சுயேச்சையாகக் களமிறங்கினேன். அதனைச் செய்தும் காட்டினேன். மக்களும் ஆதரவு வழங்கினார்கள். மக்கள் என்பதே மலையக மக்கள் முன்னணி, என்னைக் கட்சியைவிட்டு விலக்க சாதாரணதொரு குழுவால் தீர்மானிக்கமுடியாது. மக்கள் எனது பக்கமே இருக்கின்றனர்,- என்றார். (ப)

# ஐ.தே.க -ஐ.ம.ச ஒன்றிணைந்தால் அரசுக்கு எதிரான பேரியக்கமாகும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.2



ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்பட முடியுமென்றால் அரசுக்கு எதிராக பெரும் இயக்கம் ஒன்றை உருவாக்க முடியும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் இயக்கம் ஒன்றை உருவாக்கும் சூழ்ச்சி நடைபெறுகின்றதா என ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்பட முடியுமென்றால் அரசுக்கு எதிராகப் பெரும் சக்தி ஒன்றை உருவாக்க முடியும். ஏனென்றால் மக்களின் அதிருப்தியை அரசாங்கம் சந்தித்து வருகின்றது. நாமும் அவதானத்துடன் அரசின் நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றோம். நாம் ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை அதிகரித்து அரசுக்கு எதிரான கட்சிகளையும் இணைத்து மக்களுக்கு எதிராகச் செயற்படும் அரசின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்குத் தயாராகி வருகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய எதுவித தடையும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கி இரு தரப்பாரும் ஒன்றிணைந்து செயற்படலாம்- என்றார். (ப-இ)

# நிபுணர்கள் அறிக்கைக்காக காத்திருக்கும் அமைச்சரவை

கொழும்பு, செப்.2

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இன்னமும் அமைச்சரவைக்குக் கிடைக்கவில்லை என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.


நேற்றுமுன்தினம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவையால் அவை மதிப்பாய்வு செய்யப்படும். நிபுணர் குழு அறிக்கையை வழங்குவதற்கு அமைச்சரவை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை வழங்கவில்லை. ஆனால் திட்டங்களை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதன்கிழமை (இன்று) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் அடுத்தவாரம் அமைச்சரவை கூடும்போது அது மதிப்பாய்வு செய்யப்படும்- என்றார்.

கடந்த வாரம் நடைபெற்ற புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில், அரசமைப்பின் 19அவது திருத்தத்தை இரத்துச் செய்யவும், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை உருவாக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதையடுத்து 20ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்காக நிபுணர் குழு ஒன்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழுவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, தினேஷ் குணவர்தன மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் உள்ளடக்கப்பட்டனர். (ஏ-இ)



நானாட்டான்ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயமஹோற்சவத் திருவிழாவின். பத்தாம் நாளான நேற்று பக்தர்கள் தீர்த்தம் மற்றும் காவடிகளை இராசமடு சாளம்பன் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து எடுத்து வந்தனர். (க-213)

# மஞ்சள் இறக்குமதி; பேச்சுக்கள் ஆரம்பம்

கொழும்பு, செப்.2

தற்போது சந்தையில் ஏற்பட்டுள்ள மஞ்சள் பற்றாக்குறை காரணமாக மஞ்சள் இறக்குமதி குறித்த பேச்சுக்களை மேற்கொண்டு வருவதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.பி. ஹீன்கேந்த தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள மஞ்சள் பற்றாக்குறைக்கு இவ்வாண்டு இறுதிக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப-இ)

# 14 பேருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல்

## சர்வதேச பொலிஸ் ஊடாக நடவடிக்கை

கொழும்பு, செப்.2

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள குற்றச்செயல்களில் ஈடுபடும் 14 பேரை கைதுசெய்வதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் சர்வதேச பொலிஸார் மூலம் சிவப்பு அறிவித்தல் பெற்றுள்ளனர்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள், வெளிநாடுகளில் மறைந்துள்ளனர் என்று பதில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

நீதிமன்ற செயற்பாடுகளுக்கு தேவையான 14 சந்தேகநபர்கள் தொடர்பாக 2 மாதங்களுள் சிவப்பு அறிவித்தல் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது 14 சந்தேகநபர்களும் கொலை, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள். 14 பேரையும் விரைவில் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்

குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு சொந்தமான, மேல் மாகாணத்தில் உள்ள 4 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சுமார் 900 பேர்ச்சஸ் காணியை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு உரித்தான 12 சொகுசு கார்கள், 7 முச்சக்கரவண்டிகள் மற்றும் 7 மோட்டார் சைக்கிள்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சந்தேகநபர்களின் 102 வங்கிக் கணக்குகளில் உள்ள 960 இலட்சம் ரூபா பணமும் அரசுடைமையாக்கப்படவுள்ளது. என்றார். (எ-இ)

## சுவர் துளையிடும் கருவி திருட்டு

சாவகச்சேரி, செப்.2

சீரமைக்கப்படும் வீடொன்றில் இருந்த சுவர் துளையிடும் கருவி ஒன்று திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியில் நடந்துள்ளது.

வீடொன்று சீரமைக்கப்படும் நிலையில் வீட்டு உரிமையாளர், நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிவரை அங்கு நின்றுவிட்டு, தனது வீட்டுக்குச் சென்றுவிட்டு காலையில் வந்தபோது அங்கு வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான சுவர்களில் துவாரமிடும் இயந்திரம் திருட்டு போயிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-9)

## கஞ்சா விற்பனை: தம்பதி கைது

கொழும்பு, செப்.2

இரண்டு வயதான தமது மகளையும், மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு, கேரளா கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட கணவன், மனைவியை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தின் மோசடி தடுப்பு பிரிவினர் இவர்களைக் கைதுசெய்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர்களை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அதன் போது தம்வசம் வைத்திருந்த கஞ்சாவில் ஒரு பகுதியை சந்தேகநபர்களில் ஒருவரான பெண் விழுங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 10 கிராம் கஞ்சாவுடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கஞ்சா விற்பனைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25 மற்றும் 30 வயதான இளம் தம்பதியர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## ஊடகவியலாளருக்கு விளக்கமறியல்

கைது செய்யப்பட்ட இணைய ஊடகவியலாளரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு புதுக்கடை இலக்கம் 6 மேலதிக நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுத்தும் வகையில், இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டதாகத் தெரிவித்து, ஊடகவியலாளர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார். (க-இ)



## மழை, காற்றால் பாதிக்கப்பட்ட 54 குடும்பங்களுக்கு நிவாரணம்

வவுனியா, செப்.2

வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கனமழை, மற்றும் மினி சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான குலசிங்கம் திலீபன் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் தற்போது மழையுடனான கால நிலை காணப்படும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா மாவட்டத்தில் பெய்த கடும் மழை மற்றும் மினி சூறாவளியால் கணேசபுரம் பகுதியில் 54 வீடுகள் கடும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தன. அந்த மக்களின் பாதிப்புக்களை நேற்றுக் காலை நேரில் சென்று ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அது தொடர்பில் உடனடியாக மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டு அக் குடும்பங்களுக்கான உடனடித் தேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். 54 குடும்பங்களுக்கும் உடனடித் தேவையான தரப்பாள்கள் மற்றும் உணவுகள் வழங்கிவைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவி நிவாரணமாக தலா 10 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ப-இ)

## ஆளுநரை சந்திக்கவுள்ளனர் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், செப்.2

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பெறுபேறு தாமதமாக வழங்கப்பட்டதால் அரச நியமனத்தில் உள்வாங்கப்படாத பட்டதாரிகள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸைச் சந்திக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2013/2014 கல்வியாண்டில் கலைப்பீட இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கல்விசாரா ஊழியர்களின் கதவடைப்பு காரணமாக இரண்டு மாதங்களுக்கு மேலாக பரீட்சை இடம்பெறவில்லை.

இதனால் யாழ். பல்கலைக்கழகம் 2013/ 2014 கல்வியாண்டு மாணவர்களின் பட்டதாரி நிலையியல் கூற்றை நேற்று முன்தினமே வழங்கியது.

அரசின் புதிய பட்டதாரி நியமன அறிவிப்பின்போது பட்டதாரி நிலையியல் கூற்று இல்லாத காரணத்தால் 470 பட்டதாரிகளும் உரிய நேரத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது போனது. அவர்கள் தங்கள் விண்ணங்களை எவ்வாறு சமர்ப்பிப்பது என்பது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இவ்வாறு பாதிப்புக்குள்ளான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அறிவுறுத்தியுள்ளார். பாதிப்புக்குள்ளான பட்டதாரிகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணங்களைச் சமர்ப்பிப்பது சிறந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-50)

## டிஜிற்றல் மயமாகிறது கொழும்பு பங்குச் சந்தை

கொழும்பு, செப்.2

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலின் பேரில், கொழும்பு பங்குச் சந்தையில் அனைத்து நடவடிக்கைகளும் 17ஆம் திகதி தொடக்கம் டிஜிற்றல் மயமாக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பங்குச் சந்தையின் டிஜிட்டல் மயமாக்கல் நிறைவடைவதை அறிவிப்பதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப்பரிவர்த்தனைப் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே 17ஆம் திகதி தொடக்கம் டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

## ‘நல்லூர்க் கலகம்பகம் நூல் வெளியீடு

கந்தர்மடம், செப்.2

புலவர்மணி வை.க.சிற்றம்பலம் எழுதிய ‘நல்லூர்க் கலகம்பகம்” என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கந்தர்மடம் இந்து சமயப்பேரவையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கலாபூஷணம் எஸ்.சிவஞானராசாவும், வாழ்த்துரையை புலவர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனும், தலைமையுரையை இந்து சமயப் பேரவைச் செயலாளர் ஈசானசிவம் ஸ்ரீ. சிவ.சக்திகிரீவனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் அறிமுக உரையையும், ஆய்வுரையையும் கவிஞர் ம.பா.மகாலிங்கசிவம் நிகழ்த்தவுள்ளார். (ஐ)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

மாளிகாவத்தையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 5 கிராம் 640 மில்லிகிராம் ஹெரோய்ன் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவு நேற்றுக் காலை 6.45 அளவில் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். 51 வயதான ஒருவரே இதன் போது கைதுசெய்யப்பட்டார். அவர் மேலதிக விசாரணைகளுக்காக மாளிகாவத்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ப-இ)

அமரர் தர்மலிங்கத்தின் நினைவுக் கட்டுரை

# மக்களின் இதயத்தில் இடம்பிடித்த 'தருமர்'



ஆ.சி.கணேசவேல்,
உப தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றில் உன்னதமான பல தலைவர்களை இழந்துவிட்டோம். "உன்னதமான இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்யும் மனிதன் மாந்தருக்குள் தெய்வமாகிறான்"என சொல்லப்படுகிறது. அந்த வகையில் ஈழத் தமிழ் பேசும் மக்களின் உன்னதமான இலட்சியத்திற்காக பல வருடங்கள் போராடி தனது உயிரையும் தியாகம் செய்த முன்னாள் உடுவில் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 35ஆவது சிரார்த்ததினம் இன்றாகும்.

அமரர் தர்மலிங்கத்திடம் மூன்று முக்கியமான பண்புகள் இருந்தன. அவற்றுள் முதலாவது, அவர் மக்களிடம் வைத்திருந்த நம்பிக்கை. இந்த நம்பிக்கை அவரைக் காட்சிக்கு எளியராக மக்கள் மனம் திறந்து உரையாடத் தக்கவராக வைத்திருந்தது. சர்வதேச மட்டத்தில் அவரை சமதர்ம நாடுகளின் நண்பனாக சோஷலிச போராட்டங்களின் ஆதரவாளனாக வைத்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னர் சமூக சமத்துவம், சமூக சீர்திருத்தம், கூட்டுறவுத்துறை, கிராம அபிவிருத்தி உள்ளூராட்சி மன்றம் ஆகியதுறைகளில் ஈடுபட்டு தம்மைப் பக்குவப்படுத்தி, அவரது நேர்மையாலும் தியாகத்தாலும் முன்னணித் தமிழ் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளனாக 1952ஆம் ஆண்டு தேர்தலுடன் தன்னை ஈடுபடுத்திச் செயற்பட்டார். அந்த ஆண்டு தந்தை செல்வா முதன் முதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டபோது அவரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை தாங்கி தனது தமிழ் உணர்ச்சியை வெளிக்காட்டினார். 1959ஆம் ஆண்டு தொகுதி நிர்ணய ஆணைக்குழு "உடுவில்"என்ற புதிய நாடாளுமன்ற தொகுதியை உருவாக்கியது. அதைத் தொடர்ந்து 1960ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தந்தை செல்வாவின் விருப்பத்திற்கமைய உடுவில் தொகுதியில் இலங்கைத் தமிழரசுகட்சியின் சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார்.

அப்பொழுது இவருடன் கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், கூட்டுறவாளர் வீ.வீரசிங்கம், பிரபல சட்டத்தரணி ஜெ.டி.ஆசீர்வாதம் உட்பட ஏழு பெரியோர்கள் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்தனர். தொடர்ந்து நடைபெற்ற பல தேர்தல்களிலும் உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதிகளில் போட்டியிட்டு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டி தொடர்ச்சியாக இருபத்திமூன்று வருடங்கள் நற்பணி புரிந்து 1983ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் ஆறாவது திருத்தச் சட்ட மூலத்தை எதிர்த்துத் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் இதயத்தில் தமக்கென்று தனியிடம் பெற்ற "தர்மர்"தான் சார்ந்த கட்சிக்கு என்றும் விசுவாசமாக இலட்சியப்பற்றுடன் முழுநேர ஊழியனாகப் பாடுபட்டார். இவர் இள வயதிலேயே இடதுசாரிக் கொள்கைகளால் கவரப்பட்டார்.

அந்தக் காலத்தில் சாதிக் கொடுகளைத் துடைத்தெறியத் துணிந்து செயற்பட்டார். அதன் காரணமாக இவரை பெரும்பான்மை இன மக்கள் சேர்ந்து இவரை அப்பொழுது ஆபிரிக்க ஆசிய விடுதலை இயக்கத்தின் உப தலைவராகவும், இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் முக்கியஸ்தராகவும் தெரிவு செய்து கௌரவித்தார்கள்.

"தர்மரின்"நாடாளுமன்ற வாழ்க்கை ஒருகாவியமாகும். இவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளைப் பார்போமானால், தெளிந்த சிந்தனையும் அறிவில் எழுந்த உணர்ச்சியும், இனப்பற்றும் மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும், சமரச நோக்கும் செறிந்து காணப்படுவதைக் காணலாம். நாடாளுமன்றத்தில் ஆழமான கருத்துகளை சாதாரணமான வார்த்தைகளில் நகைச்சுவையாக கூறும் பண்பு அவரிடமிருந்தது. சுருங்கக் கூறி விளங்க வைக்கும் ஆற்றல் அவரிடமிருந்ததால் மேடைப் பேச்சுகள் அல்லது நாடாளுமன்ற உரைகள் ஆணித் தரமாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் அமைந்திருக்கும்.

1972ஆம் ஆண்டுக்குப் பின்பு தமிழ் இளைஞர்களின் விடுதலைக் கிளர்ச்சி தீவிரமடைந்த போது பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது, அந்த இளைஞர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருக்கு ஆறுதல் கூறி உதவிகளும் புரிந்ததை எவரும் மறக்க முடியாது. மிகவும் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் 1918ஆம் ஆண்டு மார்கழி மாதம் 05ஆம் திகதி பிறந்த "தர்மர்" அரசியலில் மட்டுமன்றி ஆன்மீக வழியிலும் அதிக ஈடுபாடு கொண்டவர்.

தாவர போசனத்தை இறுகக் கடைப் பிடித்தவர். இவர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் அறங்காவலராக விளங்கி ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். ஆலயச் சூழலில் ஆதரவற்றோருக்கான இல்லத்துக்கு அடிக்கல் நாட்டி தொடக்கி வைத்தவரும் இவரே.

"இலங்கையர்"என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் 'தர்மர்', கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை உள்ளம் கொண்டவர். சொல்லிலும் செயலிலும் எவரையுமே புண்படுத்தாத நல்ல மனிதர். "தர்மர்"சமூக சேவையிலும் அரசியலிலும் ஈடுபட்டு தனது ஏராளமான காணி நிலங்களையும், சொத்துக்களையும் ஏழை மக்களுக்கும், கல்விச் சாலைகளுக்கும் வழங்கி இன்பம் கண்டவர். இன்று கோப்பாயில் அமைந்துள்ள கல்வியியல் கல்லூரி அமைவதற்கு தர்மரின் குடும்பம்தான் காரணம். இந்தக் கல்லூரிக்கு இருநூறு பரப்பு காணியை இவரின் ஏகபுத்திரனும் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இலவசமாக வழங்கியதால் கல்வியியல் கல்லூரி அமைக்கப்பட்டு வருடா வருடம் பலநூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் உருவாகி வருவதை தமிழ் மக்களால் மறக்க முடியாது.

அமரர் "தர்மர்"நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தபின் 1983ஜுலை அனர்த்தங்களின் பின்னர் பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் தங்கியிருந்தார்கள். ஆனால் "தர்மர்"எந்த ஒரு நாட்டுக்கும் செல்லாது எமது நாட்டிலே துணிந்து தங்கி மக்களுக்கு தன்னாலான தொண்டுகளை ஆற்றி வந்தார்.

"காய்க்கிற மரத்துக்கு தான் கல்லால் எறிவார்கள்" என்ற முதுமொழிக்கு அமைவாக தர்மருக்கு பல தடவைகள் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஒரு முறை இனம் தெரியாத இளைஞர்கள் இவரின் வீட்டுக்கு வந்து தொலைபேசிகளை உடைத்து அட்டகாசம் புரிந்தார்கள். அது மாத்திரமல்ல தர்மர் பயணம் செய்யும் ஜீப் வண்டிக்கு வடமராட்சிப் பகுதியில் தீ மூட்டப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காக தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த எங்கள் அருந்தலைவர் தர்மர் ஒரு திருமண விழாவில் பங்கு பற்றிக்கொண்டிருந்தபொழுது கடத்திச் செல்லப்பட்டு சுட்டு படுகொலை செய்யப்பட்டாலும் அன்னாரையும் அவர் கொண்ட இலட்சியப் பற்றையும் தமிழ் மக்களின் இதயங்களிலிருந்து என்றுமே அழிக்க முடியாது. இந்தப் படுகொலையையிட்டு முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபருமான அமரர் அமிர்தலிங்கம் கூறுகையில் "தர்மர், தமிழனாலேயே படுகொலை செய்யப்பட்டார் என்று எண்ணும்போது ஒவ்வொரு தமிழனும் வெட்கத்தினால் தலைகுனிய வேண்டிய நிலையை இப்பாதகச் செயலை செய்தவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள்" என்றும் கூறினார். தர்மரின் படுகொலையை கேள்வியுற்ற முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி இக்கொலை கொடுமையானதும் கொடூரமானதும் என துயரம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அமரர் தர்மலிங்கம் மக்களுக்குச் சேவையாற்றி அவர் விட்டுச்சென்ற மக்களுக்கான பணிகளை அன்னாரின் ஏக புத்திரன் சித்தார்த்தன் தொடர்ந்து செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

# கொரோனாத் தொற்றால் ஊரடங்கு மீண்டும் வரலாம்!

## அவதானம் தேவை என்று மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 2

**உலகளாவிய ரீதியில் கொரோனா பெருந்தொற்று இன்னும் வேகமெடுத்துள்ள நிலையில், இந்த விடயத்தில் இலங்கை கூடுதல் அவதானத்துடன் செயற்படவேண்டும். கொரோனாத் தொற்று மீண்டும் வந்தால் ஊரடங்கு உத்தரவுகள் மீண்டும் தவிர்க்க முடியாததாக ஆகிவிடும் என்று தொற்று நோய் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் மிகவும் இறுக்கமாகக் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மீண்டும் அங்கு கொரோனா பரவ ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படலாம். எனவே இந்த விடயத்தில் இலங்கை மிக மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். தொடர்ந்து சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும் -என்றார். (ம-இ)



# தனிநாயகம் அடிகளாரின் 40ஆவது நினைவு தினம்

வவுனியா,செப்.2

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றிய தனிநாயகம் அடிகளாரின் 40ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள அடிகளாரின் உருவச் சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை அனுஸ்டிக்கப்பட்டது. இதன்போது அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி அஞ்சலி நிகழ்த்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையை தமிழருவி சிவகுமாரன் வழங்கினார்

வவுனியா நகரசபையின் உபநகர பிதா சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், நா.சேனாதிராஜா, சு.காண்டீபன், சுமந்திரன், தமிழ்விருட்சம் அமைப்பின் சந்திரகுமார் கண்ணன், சமூக ஆர்வலர் விக்னா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ந-110)

# அம்பாறையில் பெரும் தூபி; சீரமைக்க நம்பிக்கை நிதியம்

## கமால் குணரத்ன தெரிவிப்பு

அம்பாறை, செப். 2

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தொல்பொருள் தளங்களில் உள்ளடங்கும் புராதன பௌத்த விகாரையான தீகவாபி தூபியின் சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு தீகவாபி நம்பிக்கை நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தப் பிரதேசமானது உள்நாட்டுப் பக்தர்களுக்கு மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கான ஒரு புனிதமான தளம். இந்தப் புனித பிரதேசத்தின் சீரமைப்புப் பணிகளுக்கு அரச நிதிகள் எதுவும் செலவிடப்படமாட்டா. எனினும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழ்கின்ற பௌத்தர்களின் பங்களிப்புடன் நிதி திரட்டப்படும்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின் படி, பௌத்த பக்தர்கள் வணக்கத்திற்கு இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள் இந்த தூபியின் மீள்கட்டுமானப் பணிகளை முடிக்க நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மீள்கட்டுமானப் பணிகளுக்காக படைவீரர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு படைவீரர்களின் ஒத்துழைப்பும் இலங்கை இராணுவப் பொறியாளர்களின் நிபுணத்துவமும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

அனுராதபுர நகரில் உள்ள ருவன்வெலி மகாசேய ஸ்தூபி அமைப்பினை ஒத்த தோற்றத்தை வழங்கும் வகையில் தீகவாபி புதுப்பிக்கப்படவுள்ளது- என்றார். (ப)

# ரயில் சாரதிகளின் போராட்டம் நிறுத்தம்

கொழும்பு,செப்.2

சீனத் தயாரிப்பிலான தரமற்ற ரயில் பெட்டிகளைக் கொண்ட ரயில் சேவைகளில் இருந்து விலகுவதற்கு மேற்கொண்டிருந்த தீர்மானத்தை ரயில் சாரதிகள் கைவிட்டுள்ளனர்.

ரயில் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டது.

பிரேக்களில் உள்ள கோளாறு காரணமாக பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படவிருந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்த போதும், இதுவரையில் உரிய தீர்மானம் எடுக்கப்படவில்லை. இதனையடுத்து, சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ரயில்களை இயக்குவதில் இருந்து விலகிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, நாட்டில் சீன தயாரிப்பிலான 100 ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை தரமற்றவை என்று ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# மின்னல் தாக்கி பெண் இறப்பு!

கொழும்பு, செப். 2

பொலன்னறுவ ஜயந்திபுர பிரதேசத்தில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 50 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வயலில் இருந்து தனது கணவருடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவரை இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளது. கணவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட இருவர் கைது

கொழும்பு, செப்.2

10 லட்சம் ரூபா பெறுமதியான 200 ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் சட்டவிரோத நாணயத்தாள்களை அச்சிட்டுக் கொண்டு செல்ல முற்பட்டபோது தங்காலை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

# நாட்டில் தொடரும் வறட்சி: நீர் விநியோகம் சிக்கலில்?

தொடரும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் எதிர் வரும் நாட்களில் நீர் விநி யோகத்தை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

எனவே, பாவனையாளர்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ந-இ)

# ஹெரோய்ன் பகிர்வுக்கு புதிய நிற முறை

## குற்ற விசாரணைப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

நாட்டில் ஹெரோய்ன் பக்கெட்டுகளைப் பகிர்வதற்காக புதிய நிற முறை ஒன்று பயன்படுத்தப்படுகின்றது என குற்ற விசாரணைப் பிரிவினர் பிரதி சொலிசிஸ்டர் நாயகம் திலீப பீரிஸ், கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன விடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மிகப்பெரிய ஹெரோய்ன் போதைப்பொருள் வர்த்தகர்கள், ஹெரோய்ன் பக்கெட்டுகளை நாடு முழுவதும் பகிர்வதற்காக இந்த முறையைப் பயன்படுத்துகின்றனர்.

குறித்த ஹெரோய்ன் பக்கெட் யாருடையது என்பது தொடர்பில் அடையாளம் காண்பதற்காக நகரத்துக்கு நகரம் பல்வேறு நிறங்கள் பயன்படுத்தி அவை விற்பனை செய்யப்படு கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை செய்வது தொடர்பில் தற்போது விளக்கமறியலில் உள்ள பொடி மற்றும் லெசி உட்பட போதைப்பொருள் விற்பனையாளர்களின் ஆதரவாளர்களினால் ஹெரோய்ன் பக்கெட்களுக்கு பல்வேறு நிறம் பயன்படுத்தி நாடு முழுவதும் பகிரப்படுகிறது.

எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சிறிதளவு பணவரவு உண்டு. பணியாளர்களுக்குத் தாமதமான விஷயங்கள் சுறுசுறுப்பாக நடை பெறும். கட்டடப் பணியைத் தொடரும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** யோகமான நாள். பெரிய மனிதர்களைத் தொடர்பு கொண்டு பழைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனையால் சிக்கனத்தைக் கையாளுவீர்கள்.

**மிதுனம்:** பேச்சிலும், செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். பெண்கள் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவினரிடையே மனக்கசப்பு உருவாகலாம்..

**கடகம்:** சகிப்புத் தன்மை தேவைப் படும் நாள். ஒருசிலர் வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் சிறிது சிரமப்படுவீர்கள். பணம் தருவதாக வாக்குக் கொடுத்தவர்களால் ஏமாற்றப்படலாம்.

**சிம்மம்:** நம்பிக்கைகள் நிறை வேறும் நாள். மனதுக்கு நெருங்கிய வர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணியாளர்கள் எதிர்பார்த்த தகவல் கிடைக்கும்.

**கன்னி:** நேர்மறை எண்ணங்கள் ஏற்படும் நாள். அலுவலகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. திடீர் நற்செய்தி ஒன்று உங்களுக்காக காத்திருக்கிறது.

**துலாம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் நாள். சகோதர வழியில் சுபச்செய்தி உண்டு. வீடு, சொத்துப் பராமரிப்பில் தீர்மானித்த விஷயங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** இருவித பலன்கள் உள்ள நாள். வியாபாரத்தில் வேலையாட்களின் நடத்தை வருத்தம் ஏற்படுத்தும். பணியாளர்களின் திறமை வெளிப் படும்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணிகளைச் செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு பொருட்களை வாங்குவீர்கள். மிகவும் முயன்று வெளியூர் பயணம் மேற் கொள்வீர்கள்.

**மகரம்:** வேலைப்பளு அதிகரிக்கும் நாள். குடும்பத்தில் ஏற்படும் சலசலப்பைப் புன்னகையுடன் சமாளிப்பீர்கள். யாரும் தன்னைப் புரிந்துகொள்ளவில்லை என்ற ஆதங்கம் தீரும்.

**கும்பம்:** மனதில் இருந்த பயங்கள் தீரும் நாள். குடும்பத்தில் பெண்களால் நிம்மதி உண்டு. பல நாட்கள் சந்திக்காத நண்பர்கள் தொடர்பு கொள்வார்கள்.

**மீனம்:** எதிர்ப்புகள் நிறைவேறும் நாள். கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல்கள் குறையும். எதிர்பார்த்த விஷயம் ஒன்றிற்கு அதிகம் செலவாகலாம்.



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை 8 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

## முகக்கவசத்துக்குள் ஹெரோய்ன்: கம்பஹாவில் நூதனமான கடத்தல்

கம்பஹா, செப்.2

முகக்கவசத்துக்குள் ஹெரோய்ன் கடத்தப்பட்ட சம்பவமொன்று கம்பஹா கனேமுல்ல பகுதியில் பதிவாகியுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சிறிய அளவில் 7 பொதிகளில் ஹெரோய்ன் முகக்கவசத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் 36 வயது டைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த ஹெரோய்ன் போதைப்பொருள் பாடசாலை மாணவர் களை இலக்கு வைத்து கடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (வ-இ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மண்கும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயம், வெண்புரவிநகர், பூம்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** தாண்டிக்குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, இரணையிலுப்பைக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, நொதேர்ண் பண்ணை, புதுக்குளம் நீர்ப்பாசன சபை, மறக்கறமபளை சமயபுரம் வரண் அரிசி ஆலை, தாண்டிக்குளம் நீர்ப்பாசன சபை, புதிய பேருந்து தரிப்பிடம், பூவரசங்குளம், ஆண்டியப் புளியங்குளம், பூவரசங்குளத் திருந்து வாரிக்குட்டியூர் வரை ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** கொக்கு படையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், துருக்கி நகரம், தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



## வேல் தாங்கிய பாதயாத்திரை ஆரம்பம்

திருகோணமலை, செப்.2

வரலாற்றுச் சிறப்புமிக்க வெருகலம் பதியானின் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு, திருகோணமலை உப்புவெளி சோலை வைரவ கோவில் பாதயாத்திரைக் குழுவினரின் வேல் தாங்கிய பாதயாத்திரை நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது. திருகோணமலை அருள்மிகு மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமான் கோவிலில் இருந்து மூதூர் வெருகலம் பதி சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்கு இந்தப் பாதயாத்திரை மேற்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெருகல் சித்திர வேலாயுதப் பெருமானின் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-40)

## தலதா இணையத்தளத்தின் மீது நைஜீரியாவிலிருந்து தாக்குதல்

கண்டி, செப்,2

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை உத்தியோகப்பூர் இணையத்தளத்தின் மீது நடத்தப்பட்ட சைப தாக்குதல் நைஜீரியா நாட்டிலிருந்து மே கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டு ளது. இணையத் தாக்குதலை மேற்கொள்ளு நபர்களே இதை நடத்தியுள்ளனர் எனத் தெ யவந்துள்ளது.

தற்போது அந்த இணையதளம் வழமைக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ

# கண்டி அதிர்வு தொடர்பில் ஆராய மேலும் ஒரு குழு

கண்டி, செப்.2


கண்டியின் சில பிரதேசங்களில் ஏற்பட்ட அதிர்வு நிலை தொடர்பில் ஆராய்வதற்கு மேலும் ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளது என புவியியல் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 6 பேர் அடங்கிய குழுவொன்று அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 29 ஆம் திகதி இரவு கண்டி தலத்துஓய, குருதெனிய, ஹாரகம, அனுரகம உள்ளிட்ட பகுதி களில் அதிர்வு நிலை உணரப்பட்டுள்ளது. இது தொடர்பில் புவியியல் பணியகம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்ததுடன் அது தொடர்பான விசாரணை அறிக்கை நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# பிரணாப்பின் மறைவு கவலைக்குரிய ஒன்று

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.2



பிராந்திய அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விசாலமான அனுபவத்தையும் தெளிவையும் கொண்டிருந்த சிரேஷ்ட அரச தலைவரான இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியினமறைவு மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும்.

இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மறைவுக்காக வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனது தாய்நாட்டுக்கு அவர் ஆற்றிய சேவைக்காக பத்ம விபூஷண் மற்றும் பாரத ரத்னா ஆகிய விருதுகளைப் பெற்றுக்கொண்ட பிரணாப் முகர்ஜி, பாரத நாட்டிற்காக செய்த அர்ப்பணிப்பு அளவிட முடியாததாகும்.

அவருடைய அரசியல் பயணத்தில் மிகவும் பொறுப்புவாய்ந்த பல்வேறு பதவிகளை வகித்தபோதும் இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோதும் இலங்கையுடன் அவரால் பேணப்பட்ட மிகவும் சுமுகமான நட்புறவுக் கொள்கை எமது மனங்களில் எப்போதும் நிலைத்திருக்கும்.

தனிப்பட்ட ரீதியில் என்னுடன் மிகவும் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்த பிரணாப் முகர்ஜியின் மறைவிற்காக நானும் பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்கவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (எ-இ)

# பொலிஸ் நிலையத்தில் பிக்குகள் மீது தாக்கு!

கொழும்பு, செப்.2

காலி - அஹங்கம பொலிஸ் நிலையத்தில் பௌத்த பிக்குகள் சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கும் இச் சம்பவத்தின்போது பதிவாகிய காணொலி தற்போது வைரலாகப் பரவிவருகின்றது. விசாரணைக்காக பிக்கு ஒருவர் உள்ளே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்திவருகின்ற நிலையில், அதனைக் காணொலியாக பதிவுசெய்த பிக்குகள் மீதே பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# மத்தள விமான நிலைய அபிவிருத்தி விரைவில்

## சுற்றலாத்துறை அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, செப்.2

மத்தள சர்வதேச விமான நிலையத்தை பெரியளவில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமையால் தொடர்ந்து மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு விஜயம் செய்து அதனைப் பார்வையிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்பொழுது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நிலைமையின் காரணமாக எமக்கு விமான நிலையங்களைத் திறக்க முடியாமல் உள்ளது.

இருந்தாலும் சுகாதாரத் துறையினர் இதற்கான அனுமதியை வழங்குவார்களானால் விமான நிலையத்தை எம்மால் திறக்க முடியும். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ற-இ)

# மீன்பிடித் தொழிலுக்கு வடக்கில் பேராபத்து!!

கொழும்பு, செப். 2

வடக்கில் மீன்பிடித் தொழில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.


இந்திய மீன்பிடிப் படகுகள் மீன்பிடிப்பதற்காக இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்துள்ளமை தொடர்பிலான மாதாந்த அறிக்கையை சமர்ப்பித்த பாதுகாப்பு அமைச்சு, வடக்கின் மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பில் தனது கவலையை வெளியிட்டது. (ம-இ)

# சிகரெட்டுகள் மீட்பு

கொழும்பு, செப்.2

ஒரு தொகைச் சிகரெட்டுக்கள் கட்டுநாயக்க வானூர்தி தள சுங்க தரப்பினரால் மீட்கப்பட்டுள்ளன. அதன் பெறுமதி ஒரு கோடியே 70 லட்சத்து 40 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவிசாவளை பகுதியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு முகவரியிட்டு அவை அனுப்பப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)



# சந்நிதியில் சங்கிலி அறுப்பு; இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 2

சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவின்போது தங்கச் சங்கிலி அறுத்த இரு பெண்கள் ஆலயக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குழுவாக இவர்கள் செயற்பட்டனரா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தவிர சந்நிதிக்கு வருகை தந்தோரின் நகைகளைக் காணவில்லை என்று நேற்று மட்டும் 16 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 30 பவுண் நகைகளைக் காணவில்லை என்று அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26-159)

## விபத்தில்...

னையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி அனோஜன் (வயது 27) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 23ஆம் மோட்டார் சைக்கிளில் மட்டுவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுள்ளார். கைதடி குட்டிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், மோட்டார் சைக்கிள் வேககட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக சாவகச்சேரி பொலிஸார் கூறினர். சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அன்று மாலையே யாழ்ப்பாணம் போதனா மருத்துக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ.5,25,26)

## 10 பவுணுக்கும்...

**குளமங்கால்**

வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்தவேளை திருட்டு இடம்பெற்றுள்ளது. 6 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுப் போயுள்ளதாக உரிமையாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**தொல்புரம்**

கணவன் மனைவி இருவரும் நேற்றுமுன்தினம் வேலைக்குச் சென்ற போதே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. நேற்றுக் காலை நகைகளை வைத்த இடத்தில் பார்த்த போது அவை திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஒ.5,25,27)

வடக்கில் முன்னணியில் திகழும் ஹோட்டலில் உடனடி
**வேலைவாய்ப்பு**
- உணவு பரிமாறுபவர் - பகுதிநேரம்
- சுத்திகரிப்பாளர் - பகுதிநேரம்

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் உணவு இலவசமாக வழங்கப்படும்
இல.33, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 624 8529

**ஆங்கில ஆசிரியர் (பெண்) தேவை**
"உரும்பிராய் கிட்ஸ் பார்க்"
முன்பள்ளி பாடசாலைக்கு பெண் ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடமாவுள்ளது. ஆங்கில பாடத்தில் மேலதிக தகைமை பரிசீலிக்கப்படும்.
விண்ணப்பமுடிவுதிகதி: 07.09.2020
தொடர்பு: 077 656 5258, 021 205 4626
உரும்பிராய் கிட்ஸ் பார்க்
ஞானவைரவர் வீதி, (முருகன் வீதி, உரும்பிராய்)

**பதினெட்டு ஆண்டு நினைவு** (18 ஆம் ஆண்டு)
**செல்வி கந்தவனம் தர்சிகா**
(மாணவி - கொக்குவில் இந்துக் கல்லூரி)
திதி: பிரதமை (02.09.2020)

சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990
சிந்தாமணி விநாயகர் கழல்சேர்ந்தது 23.08.2002



கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்சிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!
என்றும் உம் நினைவுகளோடு
குடும்பத்தினர்.
077 940 5803
கவி போட்டோ, நவாலி தெற்கு.

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
திருநெல்வேலியில் வீட்டுவேலை செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
077 802 9725

**காணி தேவை**
யாழ் நகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வீட்டுடன் / வெற்றுக்காணி வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை.
077 615 3563

**வேலைக்கு ஆள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் N Mobils [No 11, (Upstairs) New Market, Hospital Road, Jaffna.] தொலைபேசி நிலையத்திற்கு ஆட்கள் தேவை. (வயதெல்லை 26 உட்பட்டது)
077 440 8040

**திருத்தி வாசிக்கவும்**
கடந்த 31.08.2020 அன்று
உதயன் பத்திரிகையில் 12 ஆம் பக்கத்தில்
வெளிவந்த
**கண்ணீர் அஞ்சலியில்**
**முருகேசு ஜெயசிங்கம்** என்பதற்கு பதிலாக
**முருகேசு ஜெயசாங்கர்** என தவறுதலாக
பிரசுரமாகியுள்ளது அதனை
**முருகேசு ஜெயசிங்கம்** என
திருத்திவாசிக்கவும்.
விளம்பரதாரர்

**தாதிய உதவியாளர் தேவை**
**சன்றைஸ் பற்சிகிச்சை** நிலையத்திற்கு
பெண் உதவியாளர் தேவை
05.09.2020 சனிக்கிழமை
ந.ப. 12.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்
தொடர்பு: 077 934 7687
021 320 9764

# தனிப்பட்ட விழாக்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டாம்
## கோத்தாபய அறிவிப்பு

கொழும்பு, செப். 2
மக்களின் நலனுக்காக அரசின் அபிவிருத்தித்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கும் கீழ் மட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அன்றாட உத்தியோகபூர்வ பணிகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நேரத்தைச் செலவிடுவதற்கு மேலதிகமாக விழாக்கள், பரிசு வழங்கும் நிகழ்வுகள், திறப்பு விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கவில்லை என்பதால் அத்தகைய நிகழ்வுகளுக்காக ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்க வேண்டாமென அனைவரிடமும் அன்பாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஜனாதிபதி மீதுள்ள அன்பு மற்றும் மதிப்பின் காரணமாக அதிகளவானோர் தமது வாழ்வின் முக்கிய சந்தர்ப்பங்களில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கின்றனர். மக்கள் தன் மீது வைத்துள்ள இந்தப் பற்றை ஜனாதிபதி பெரிதும் மதிக்கின்றார்.

எனினும் உத்தியோகபூர்வ கடமைகளுக்குப் புறம்பாக தமக்கு கிடைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களையும் மக்களின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்பதற்கு ஜனாதிபதி உறுதி கொண்டுள்ளார், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

## மதுவிற்பனையில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 2
அல்லைப்பிட்டியில் சட்டவிரோதமான முறையிட்டுள்ளார் என அரச மதுபான போத்தல்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான நபரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

180 மில்லிலீற்றர் கொள்ளவுடைய அரச மதுபான போத்தல்கள் 46 இனை வீட்டில் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த போது இவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ஒ.5,25)

## கோடாவுடன் ஒருவர் கைது

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தில் 40 லீற்றர் கோடாவுடன் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். காட்டுக்குள் வைத்து கசிப்பு காய்ச்சுவதற்குத் தயாராக இருந்த போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த நபரை நேற்று முற்படுத்தியபோதுபிணையில் விடுவித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு தவணையிட்டார். (ஒ.5,25)

## மரண அறிவித்தல்



### திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி

ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும், பொன்னம்பலம் (லண்டன்), திருமதி தவமணி கனகசுந்தரம் (கனடா), சண்முகராசா, காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, சற்குணதேவி மற்றும் சரஸ்வதி மோகநாதன் (உள்ளூராட்சி அமைச்சு வ.மா), மகாலக்சுமி, சிவகுமார், நந்தகுமார் (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் தாயாரும், பிரமிளா (லண்டன்), கனகசுந்தரம் (கனடா), சிவலிங்கம், மோகநாதன் (கோட்டக்கல்வி அலுவலகம், உடுவில்), தர்மராசா, கௌரி ஆகியோரின் மாமியும், தாட்சாயினி, ஜாமினி, மதிகரன், கஸ்தூரி, குமிரா, சர்மிளா, சரணியா, தௌசிசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 232/4, செபஸ்தியார் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1948



மறைவு 01 . 09 . 2020

### தம்பிமுத்து சண்முகநாதன்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும் இல. 6 D மல்லாவியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சண்முகநாதன் நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், விசயலட்சுமியின் அன்புக் கணவரும், புனிதா (லண்டன்), பிரதீபன் (லண்டன்), அஜிதா, சுசிதா (சுவிஸ்), சுபதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைசிங்கம், கோகிலேஸ்வரி, நவரத்தினராசா (நவம்), கோமதி, நகுலேஸ்வரன் (வளந்தான்), இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், உமாசுதன் (சுவிஸ்), சத்தியதாசன் (லண்டன்), சிவமாலா (லண்டன்), விஜயகுமார், ஜிபித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சாமியன், சயானி, வஸ்மிகா, வர்னீஸ், சதுஜா, சானுகா, அபிஸ்கா, அஸ்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) புதன்கிழமை இல. 6D மல்லாவியில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் அனிஞ்சியன் குளம் இந்து மயானதிற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 D மல்லாவி.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 11 . 1932

மறைவு 31 . 08 . 2020

### சிதம்பரப்பிள்ளை தங்கம்மா

யாழ். வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், மந்துவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தங்கம்மா நேற்றுமுன்தினம் (31.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கர், செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நிற்சிங்கர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், நிற்சிங்கராஜா, விநாயகமூர்த்தி, திருமலர், சிவயோகம், இராஜகுலசிங்கம் (ஆசிரியர்- யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி), யோகமலர் (லண்டன் - முன்னாள் தென்மராட்சி சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலராணி, கெங்கேஸ்வரி, தனபாலசிங்கம், நிரஞ்சுளா, பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் இளையபிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தகுமாரி (ஆசிரியை- யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), காலஞ்சென்ற றதீஸ், முகுந்தன் - கவிதா, சயந்தன் (லண்டன்)- காயத்ரி (லண்டன்), சத்தியா (ஆசிரியை- யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை) - பிரகாஷ் (ஆசிரியர்- யா/மீசாலை வீரசிங்கம் ம.க), கீர்த்தனா (ஆசிரியை- ம/பேசாலை பற்றிமா கல்லூரி), தர்சன், டேனிகா (எழுதுவினையர்- தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்) - சிவனேசன், காலஞ்சென்ற யதீஸ்வரன் - மற்றும் தர்சிகா, காலஞ்சென்ற சுபேஸ்வரன் மற்றும் நிவேதிகா, தினோஷா, விமல்ராஜ் (நில அளவைத் திணைக்களம்), தர்மிகா (மாணவி 2018 A/L Bio யா/ மெதடிஸ் உயர் பெண்கள் கல்லூரி), வைஷ்ணவி (மாணவி- Vitebsk State Medical University), சாம்பவி (மாணவி 2018 A/L Maths யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சரவணன்(மாணவன் 2020 A/L யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுவர்ணியா(மாணவி தரம்- 9 யா/ மீசாலை வீரசிங்கம் ம.க), அபினாஷ்(மாணவன் தரம்- 9 யா/ மீசாலை வீரசிங்கம் ம.க), அக்சிகன்(மாணவன் தரம் - 4 யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை), அக்ஷ்மிகா, ஆருஷி(லண்டன்), அனிஷ் (லண்டன்), சேயானா, நிதா(மாணவி- தரம் 6 மீசாலை வீரசிங்கம் ம.க),மதுஷாயினி (மாணவி தரம் - 04 யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை ம.வி), யதுஷனா(மாணவி தரம்- 8 வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்), கோபிகா(மாணவி தரம்- 06 வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) புதன் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
கா. பிரகாஷ் - பேரன் - 077 770 4005
பா. யோகமலர் - மகள் - + 447 8522 43270

தகவல்: குடும்பத்தினர்
மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

## முதலாம் ஆண்டு விழிநீர் காணிக்கை



மண்ணில் 10 . 06 . 1935

விண்ணில் 02 . 09 . 2019

### அமரர் கிறிஸ்தோத்திரம் அந்தோனியாப்பிள்ளை (தங்கம்)

பாசமும் அறிவும் பண்பும் ஊட்டி
தரணியில் எம்மை உயர்த்தியவரே!
மேதினியில் சிறப்புடனே வாழ – உம்மை
மெழுகாக உருக்கி எம்மை வாழ வைத்தீர்

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் உங்கள் புன்னகையையும்
காணாது வாடி நிற்கின்றோம் – தாயே!
ஆண்டுகள் ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம் துயர்

அமரன் (அப்பு), பிரமிளா,
அபித்தா, அபிஷேக், அபினு (சுவிஸ்)
(சந்திரன் சூரியா)
மண்குழி வீதி, ஊர்காவற்றுறை.

077 977 9703

## மரண அறிவித்தல்

# செல்வி மாலினிதேவி முத்துரத்தினம்

தோற்றம் 22.10.1954

மறைவு 01.09.2020



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாலினிதேவி முத்துரத்தினம் நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துரத்தினம்-தவமணி ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், பத்மாதேவி, கமலாதேவி, ரோகிணிதேவி, தவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் Dr. கனகரத்தினம், தர்மஜெயசூரியர், உமா ஆகியோரின் அன்பு மைத்துனியும், உஷேந்தன், ஜெயந்தன், ஜெனினி, சுதாஜினி, அனோஜா, நிரோஜா, சஜீவ், ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் சிறியதாயாரும், சர்பிந், பானு, சியாமா, தயாபரன், கிருஷாந், தர்சினி, மோகனன், சுஜித்தா, வேல்தாஸ், விமலராஜன், இந்துகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2020) வியாழக்கிழமை 10 மணியளவில் அரச வீதி உரும்பிராயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச வீதி,
உரும்பிராய்.

தகவல்:
த.தர்மஜெயசூரியர்,

021 -223 0785, 077 175 8485

## மரண அறிவித்தல்



யூட்சன் பான்சி ஹவுஸ் நிறுவன உரிமையாளர்
**திரு.யூட்சன் அன்ரனி அவர்களின்**
அன்புத் தாயார்

அமரர்
**அருளப்பன் மேரி அஞ்சலீனா (லீலா)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.03.1946 | 01.09.2020 |

இறுதிச்சடங்கு (02.09.2020) புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (NSB வங்கி முன் ஒழுங்கை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்) நடைபெறும்.

**யூட்சன் பான்ஸி ஹவுஸ்**
தொடர்புகளுக்கு:077 251 6560

## மரண அறிவித்தல்

மண்ணில் 24 • 03 • 1946



விண்ணில் 01 • 09 • 2020

### திருமதி அருளப்பன் மேரி அஞ்சலீனா [லீலா]

புனித அந்தோனியார் கோவிலடி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பன் மேரி அஞ்சலீனா நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராயர்-றோசமுத்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-ஞானாதிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளப்பனின் அன்பு மனைவியும், அருட்பணி றொபின்சன் ஜோசேப் (அதிபர், மு/புதுக்குடியிருப்பு றோ.க. மகா வித்தியாலயம்), யூட்சன் அன்ரனி (யூட்சன் பான்சி, யாழ்ப்பாணம்), டொனாட்டா வசந்தி, காலஞ்சென்ற மாக்றேட் றோஸ் சுகந்தி மற்றும் லொறண்டா ஜெயந்தி, கிளேறா மரியசாந்தி (யா/இராமநாதன் கல்லூரி, யா/ இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரான்சிஸ்கா புஸ்பராணி, அன்ரனி ஜோர்ஜ் ராஜன் (நிதிச் செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை), காலஞ்சென்ற கிறிஸ்ரி யோசப் மற்றும் யூட் அன்ரனிஸ் (பேபி வேல்ட், சுன்னாகம்), ஹரிகரன் (கணக்காளர், யூட்சன் பான்சி யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கிறிசோஸ்தம், குணதாசன், வரப்பிரகாசம், நட்சத்திரம், அலோசியஸ் தர்மராஜா மற்றும் மேரி கிறிஸ்ரீனா, மாசறிப்போல் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை வீடமைப்பு அதிகாரசபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான றீற்றா ஞான அலங் காரம், எலிசபேத், பெர்ணதேத், அமிர்தநாதன், அம்புறோஸ் மற்றும் ரபேக்கா ரத்தினகுமாரி, மேரிமக்டலீன், ஜெபரட்ணம் மற்றும் காலஞ்சென்றவர்கான அல்பிறட், அருட்பிரகாசம் மற்றும் வின்செனற் (ஓய்வுநிலை தொழில் நுட்பவியலாளர், இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருள்டா ஒலிவர், அக்னற் லிற்வினா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), அருள் றொசிங்ரன் (முகத்துவாரம் இந்துக் கல்லூரி, கொழும்பு-15), அவ்றினா ஜெனிவ்வர் (யா/றோ.க.த.க. பாடசாலை, சுன்னாகம்), அரிஸ்ரன், டொறிஸ் அலோஷியா, வருஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருட்சகோதரி விமலினி (ஆசிரியர், பதுளை தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் ஞானத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.09.2020) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**NSB வங்கி முன்பாக**
**கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.**

தகவல்:
**அருட்பணி றொபின்சன் ஜோசேப்**
**குடும்பத்தினர்.**

தொடர்பு: 0772516560 -யூட்சன் 077 1660 448-றொபின்சன்
021 224 4298

## மரண அறிவித்தல்



### நாகசுந்தரம் நாகலட்சுமி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.03.1970 | 01.09.2020 |

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகசுந்தரம் நாகலட்சுமி நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி நாகசுந்தரம் மற்றும் நாகசுந்தரம் நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், நா.நரேந்திரன் (சுவிஸ்), நா.நாகராஜன் (கனடா), பா.நாகநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சி.நாகேந்திரம், நா.சிவநாயகி ஆகியோரின் அன்பு மருமகளும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 06 • 1993



மறைவு 31 • 08 • 2020

### கந்தசாமி அனோஜன் (அனோ)

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி அனோஜன் கடந்த (31.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி (முன்னாள் சாரதி U.N.H.C.R) மற்றும் சிவசோதிமலர் தம்பதியினரின் அன்புமகனும் நிலாந்தி (லண்டன்) துசாந்தி (லண்டன்) ஜெயந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம் கைதடி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கண்ணன், ஜெயகுமார், வாத்ஸல்யன் ஆகியோரின் மைத்துனரும் டெய்சிகா, பிருத்திகா, லக்ஸிகா, தரன், ஹரிஸ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் தெற்கு, வாகையடி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### ரெங்கசாமி புஸ்பராசா

கண்டியை பிறப்பிடமாகவும் வடலித்தோட்டம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ரெங்கசாமி புஸ்பராசா நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை 12.45 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ரெங்கசாமி, காளியம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற ராணி மற்றும் இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜானகியின் அன்புக் கணவரும், தினேஸ்குமார் (HNB Assurance, Zonal Office, Jaffna), தினேஷா, தினேஸ்கௌரி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), தினேஸ்கரன், விதுர்ஷன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், குருபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹர்ணி, விஷாலினி, ஜதுர்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2020) பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 077 3618 120**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சப்பைக்கட்டு...

சந்திப்பில் 'சப்பைக்கட்டு' காரணங்களைக் கூறினார் அந்தக் கட்சியின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது சுகாஸ் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியத்துக்கு ஊடகவியலாளர்கள் ஆற்றிய பங்கு அளப்பெரியது. கடந்த சில நாள்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி நடைபெற்ற போராட்டம் தொடர்பில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் ஊடகங்களில் வெளியானமை எங்களை வேதனையடையச் செய்துள்ளது.

யாழ்பாணம் கிட்டுப்பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் யாழ் கிளை நிறுவனத்திடம் மனுவைக் கையளிக்க இருந்த அமைப்பில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பை ஏற்று கிட்டுப்பூங்காவில் இடம்பெற்ற போராட்டத்தில் நாம் பங்குபற்றியிருந்தோம்.

யாழ்ப்பாணம் பேரூந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பேரணியில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

யாழ் பேரூந்து நிலையத்தில் ஆரம்பமான பேரணி இலங்கை அரசின் யாழ்பாண முகவராக உள்ள யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் மனுவைக் கையளிப்பதாக இருந்தது. அரசின் முகவரிடம் மனுக் கையளிப்பதை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உள்ளக விசாரணையை இணங்கிச் செயற்படுவதாகவே நாம் பார்கின்றோம்.

சர்வதேச விசாரணையைக் கோரி நீதியை நிலைநாட்டப் போராடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அபிலாசைகளுக்கு எதிரானதும் முரனானதுமான ஒன்றாக இதனைக் கருதுகின்றோம். மேலும் கடந்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சில அமைப்புக்கள் எமது கட்சித் தலைமை தொடர்பான ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தன. அத்தகைய நடைமுறைப் பிரச்சினைகளாலேயே நாம் கலந்து கொள்ளவில்லை.

கிட்டுப் பூங்காவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அலைந்து உயிரிழந்த உறவுகளுக்கே அஞ்சலி செலுத்தினோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தவில்லை. ஆனால் ஊடகங்கள் அதனைத் தவறாக மக்களிடம் கொண்டு சென்றுள்ளன.

மணிவண்ணனின் விவகாரம் குறித்து இன்னமும் 30 உறுப்பினர்களைக் கொண்ட மத்தியகுழு விசாரித்து வரும் நிலையில், விசாரணைகள் முடிவடையாமல் எடுத்த எடுப்பில் எதனையும் கூறிவிட முடியாது. விசாரணையின் பின்னர் தமிழ் மக்களுக்கும், ஊடகங்களுக்கும் தெளிவாக அறிவிப்போம். நண்பர் மணிவண்ணனின் மான்பையும் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு. ஒரு நபரை எடுத்த எடுப்பில் தூக்கியெறிய முடியாது.

கட்சியின் கொள்கையையும், தமிழ் தேசியத்தையும், தலைமையையும் ஏற்று நடக்கக்கூடியவர்கள் எமது கட்சியில் தொடர்ச்சியாக இருக்கலாம். இதற்கு மாறாக பதவிகளும், தனி நபர்களுமே முக்கியம் என கருதும் நபர்கள் வெளியேறுவதற்கான பூரண சுதந்திரம் எமது கட்சியில் உண்டு.

உள்ளூராட்சி நியமன உறுப்பினர்களை ஒரு வருடத்துக்கு ஒரு முறை மாற்றுவதென ஆரம்பத்திலேயே முடிவெடுத்திருந்தோம். சுழற்சி முறையில் பலருக்கு சந்தர்ப்பம் வழங்குவதென முடிவெடுத்திருந்தோம். அந்த வகையிலேயே எமது கட்சியின் உள்ளூராட்சி நியமன உறுப்பினர்களை சுழற்சி முறையில் மாற்றினோம். இதற்கும் மணிவண்ணின் விடயத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை, என்றார். (ஒ,5,26)

## யாரும்...

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட பின்னர் அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு தான் அனுப்பிய கடிதம் ஊடகங்களில் வெளியானமை தொடர்பில் இதன் போது அவர் குறிப்பிட்டார். மாவட்டச் செயலக அதிகாரிகள்தான் அதனை ஊடகங்களுக்கு கசிய விட்டதாகவும் தெரிவித்தார். அந்தக் கடிதத்தை வெளியிட்டதன் ஊடாக தனது அதிகாரங்கள் மக்களுக்குத் தெரிந்துள்ளதாகவும் குறிப்பிட்டதுடன், தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். (ஒ,5)

## சம்பந்தன்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது. தங்கள் சமூகத்துக்கு அநீதி இழைக்கப்பட்டதால் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போரிடத் தூண்டப்பட்டனர். அதற்கு இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்களே காரணம்' என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பு சிங்கள் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்திருந்தார்.

விக்னேஸ்வரனின் இந்தக் கருத்து ராஜபக்ச அரசைக் கொதிப்படைய வைத்துள்ளது. இது தொடர்பில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் நேற்றுக் கூட்டாகக் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள மக்களை மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் மக்களையும் படுகொலை செய்தவர்கள். மூத்த தமிழ் அரசியல் தலைவர்களையும் அவர்கள் சுட்டுப் படுகொலை செய்தவர்கள். நாட்டின் வளங்களை நாசப்படுத்தியவர்கள். நாட்டுக்கு வருவாயை ஈட்டித்தரும் பொருளாதார மையங்களை அழித்தவர்கள். இப்படிப்பட்ட புலிகளைப் பயங்கரவாதிகள் என்று சொல்லாமல் வேறு எப்படி அழைப்பது?

புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என்றபடியால்தான் பல நாடுகள் அந்த அமைப்பைத் தடை செய்தன. தமிழீழக் கனவுடன் தனிநாட்டுக் கனவுடன் இந்த நாட்டை நாசமாக்கிய புலிகள் இறுதியில் முள்ளிவாய்க்காலில் கூண்டோடு அழிந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் மண் பயங்கரவாதிகள் அழிந்த மண். அந்த மண்ணில் சத்தியப் பிரமாணம் செய்த விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும் தமது செயலை இப்போது நியாயப்படுத்துகின்றார்கள்.

அதேவேளை, கடந்த நல்லாட்சியில் முள்ளிவாய்க்கால் சென்று பயங்கரவாதிகளை நினைவுகூர்ந்து விளக்கேற்றிய சம்பந்தனும் பொதுத்தேர்தல் மேடைகளில் புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்தை நியாயப்படுத்தி உரையாற்றியிருந்தார்.

இம்மூவரும் 9ஆவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் மூவரும் திருந்துவதாக இல்லை. அதியுயர் சபையிலும் புலிகளின் பாணியில் செயற்படுகின்றார்கள். இவர்கள் மூவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைப்பதுதான் ஒரே வழி, என்றார்கள். (ஒ,5,22)

## மீண்டும்...

பில் ஆராயும் ஜனாதிபதி செலயணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலிகளை ஆயுதம் ஏந்தச் சொல்லி ஆட்சியாளர்கள் எவரும் தூண்டவில்லை. அவர்கள் தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாகத் தாங்களாகவே ஆயுதம் தூக்கி தாங்களாகவே அழிந்து போனார்கள். இந்த உண்மையை விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவின மக்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தத் தெரியாத விக்னேஸ்வரன், இன்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகிய பின்னர் தான்தான் புலிகளின் தற்போதைய தலைவர் என்ற எண்ணத்துடன் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்.

நாட்டின் அரசமைப்புக்கு முரணாக எவரும் செயற்பட்டால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். இதில் நாடாளுமன்றஉறுப்பினர்கள் விதிவிலக்கல்ல. எனவே, விக்னேஸ்வரனுக்கு எதிராக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார். (ஒ,5,22)

## காலை...

ளைப் போர்த்தி, மாலைகளை அணிவித்து அதிகாரிகள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.

அலுவலகத்தின் பெயர்ப்பலகையை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு 'இணைத்' தலைவர் அங்கஜன் இராமநாதன் திரைநீக்கம் செய்தார். யாழ்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். மதத் தலைவர்களின் ஆசியுடன், அங்கஜன் இராமநாதன் ஒருங்கிணைப்பு க் குழு இணைத் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றார்.

### அரைவாசிப் பேர் வரவில்லை

இந்த நிகழ்வுக்கு அரச அதிகாரிகள் 145 பேர் வரையில் அழைப்பு அனுப்பப்பட்டது. அவர்களில் 60 பேர் அளவிலேயே பங்கேற்றனர். எஞ்சியோர் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. மேலும் அங்கஜனின் ஆதரவாளர்கள் சுமார் 500 பேராவது கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 200 இற்கும் குறைவானோரே பங்கேற்றனர். இதனால் 700 பேருக்கு கொள்வனவு செய்த சிற்றுண்டிகள் மிஞ்சின.

சிற்றுண்டிக்கான செலவு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் அரச நிதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கஜன் இராமநாதன் தனது நிதியில், நிகழ்வில் பங்கேற்றோருக்கு குளிர்பானம் மாத்திரம் வழங்கினார். மாவட்டச்செயலக மற்றும் பிரதேச செயலக ஊழியர்களுக்கு மதிய போசனமும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிதியில் வழங்கப்பட்டது.

### அங்கஜனின் உறவினர்களுக்கு முன்வரிசை

மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஒருங்கிணைப்புக் குழு 'இணைத்' தலைவரின் பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அதிகாரிகளுக்கு பின்வரிசை ஆசனமும், அங்கஜன் இராமநாதனின் உறவினர்களுக்கு முன்வரிசை ஆசனமும் வழங்கப்பட்டது.

### 'இணைத்' தலைவர்

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக அங்கஜன் நியமிக்கப்பட்டிருந்தாலும், அவரது ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில், 'இணைத்' தலைவர் என்று பெயரிடப்பட்டே அவருக்கான ஆசனம் ஒதுக்கப்பட்டதுடன், அதிகாரிகளும் 'இணைத்' தலைவர் என்றே விழித்தனர். (ஒ,ப,5)

## ஏனைய...

பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

அரசால் நிறுவப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயலணி மூலம் குறைந்த வருமானமுடைய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

எவ்வித கல்வித் தகைமையும் இல்லாத அல்லது க.பொ.த சாதாரண தரத்தை விடவும் குறைந்த கல்வி நிலையில் உள்ளவர்களும் பயிற்சி பெறாதவர்களும்.

விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் 18 வயதிற்கு குறைவாகவும் 45 ஐ விட அதிகமாகவும் இல்லாது இருத்தல்.

சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகுதி இருந்தும் பெறாத குடும்பத்தின் தொழிலற்ற உறுப்பினராக இருத்தல் அல்லது சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பத்தில் தொழிலற்ற உறுப்பினராக இருத்தல். வயது முதிர்ந்த, நோயாளியான பெற்றோர் அல்லது ஊனமுற்ற உறுப்பினரைக் கொண்ட குடும்பத்தில் உறுப்பினராக இருத்தல்.

விண்ணப்பிக்கும் பிரதேசத்தில் நிலையான வசிப்பிடத்தை கொண்டவர் ஆகியோர் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்குத் தகுதியானவர்கள்.

ஒரு குடும்பத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தகுதிகளைக் கொண்ட ஒரு விண்ணப்பதாரி மாத்திரம் கவனத்தில் எடுக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் வசிக்கும் பிரதேசங்களில் நிலவுகின்ற தொழில் வாய்ப்புக்கள் மற்றும் விண்ணப்பதாரி கேட்டுள்ள பயிற்சி துறைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து, குறித்த தொழில் பயிற்சிக்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

தாம் வசித்துவரும் பிரதேசத்தில் அல்லது அதற்கு அருகில் உள்ள பயிற்சி நிலையங்களில் பயிற்சி வழங்கப்படும்.

சிறப்பான பயற்சியின் பின்னர் வசிக்கும் பிரதேசத்தில் அல்லது அருகில் உள்ள பிரதேசத்தில் தொழில் வழங்கப்படும்.

6 மாதகால தொடர் பயிற்சி காலத்தில் மாதம் ஒன்றுக்கு 22 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். சிறப்பான பயிற்சியை முடித்த பின்னர் தாம் பயிற்சி பெற்ற துறையில் தமது நிலையான வதிவிட பிரதேசத்தில் அரசு அனுமதி பெற்ற ஆரம்ப திறன் சாரா சம்பளம் 35 ஆயிரம் ரூபா மற்றும் கொடுப்பனவுகளைக் கொண்ட அரசின் நிலையான பணிக்கு நியமிக்கப்படுவதற்கு பயிற்சி பெற்றவர்களுக்கு சந்தர்ப்பம் உண்டு.


10 வருடகால சிறப்பான தொடர் சேவை காலத்தை நிறைவு செய்ததன் பின்னர் அரசின் ஓய்வூதியம் வழங்கப்படும்.

குறித்த துறைகளுக்கான தொழில் வழங்குதல் மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்குள் மாத்திரம் இடம்பெறுவதோடு, தொழில் பெறுபவர்கள் எந்தவொரு தரப்பினருக்கும் பணம் அல்லது எவ்வகையான இலஞ்சமும் வழங்குவது தொழில் வாய்ப்பு நிராகரிக்கப்பட காரணமாக அமையலாம், என்றுள்ளது.

(ஒ,5)

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 • 01 • 1937



இறப்பு
01 • 09 • 2020

## பொன்னையா திரவியநாதன்
## (பட்டு)

மதவடி வீதி, சுதுமலை வடக்கினைப் பிறப்பிடமாகவும், பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திரவியநாதன் நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொன்னையா லேன்,**
**ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 3019 340, 076 7338 810**

## புத்தர்...

தூண்டி விடுகிறேன் என்ற கூற்று தவறானது. நான் என் மொழியின், இனத்தின் தொன்மையில் பெருமையடைகிறேன். அதை பகிரங்கமாகக் கூறியிருக்கிறேன். கௌதம புத்தர் இந்துவாகப் பிறந்தார் என்ற வரலாற்று உண்மையைச் சொன்னால் அது தவறா என்று கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன். அவர் நேற்று வெளியிட்ட கேள்வி, பதில் ஊடக அறிக்கையில் முக்கியமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புத்தர் ஒரு இந்துவாகப் பிறந்தார் என்பது வரலாற்று உண்மை. புத்தர் ஒரு பௌத்தர் என்பதை நீங்கள் நிரூபிக்க முடியாது. எனவே இந்த தீவின் அசல் குடிமக்களின் மொழியும் தமிழ். கி.பி 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டில் மட்டுமே சிங்கள மொழி உருவானது. இலங்கையில் ஒரு தமிழனாகப் பிறந்ததில் எனது பெருமை மற்றும் எனது தாய்மொழி தமிழாக இருப்பது தமிழ் மொழியைக் குறித்து சிலாகிக்க என்னைத் தூண்டியது.

நான் என் மொழியையும் அதன் இலக்கியத்தையும் விரும்புகிறேன். அதன் இலக்கியம் உலகின் வேறு எந்த மொழி அடிப்படையிலான இலக்கியங்களுடனும் ஒப்பிடத்தக்கது. இது சிங்களவர்களை வருத்தப்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை.

இப்போது சரத் பொன்சேகா போன்றவர்கள் என்னை உடல் ரீதியான தீங்கு விளைவிப்பதாக அச்சுறுத்த தொடங்கியுள்ளனர். தெற்காசிய வரலாற்றில் நன்கு அறிந்த சிங்கள, தமிழ், முஸ்லீம் மற்றும் வெளிநாட்டு வரலாற்றாசிரியர்களைக் கொண்ட ஒரு ஆணைக்குழுவை நியமிக்குமாறு நான் கேட்டுக் கொண்டேன். சிங்கள மற்றும் தமிழர்கள் அனைவரின் நலனுக்காக அவர்களிடமிருந்து உண்மையைப் பெறுவதற்காக அத்தகைய ஆணையத்தை உருவாக்கும் பணியை சரத் பொன்சேகா தானே எடுத்துக் கொள்ள வேண்டும்.

கிமு 800 க்கு முன்பே சிங்களம் தமிழ் மொழிக்கு முன்பே இருந்தது என்று சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்றாசிரியர்களின் நம்பகமான ஆணையம் சொன்னால், நான் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முக்கியமான விடயம் என்னவென்றால், தற்போதுள்ள வரலாற்று ஆதாரங்களின்படி சிங்கள மற்றும் தமிழர்கள் தங்கள் கடந்த காலத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். சிங்களவர்கள் தங்களைப் பற்றிய உண்மையை அறிந்திருந்தால், தமிழர்கள் மீதான அவர்களின் அணுகுமுறையில் அவர்கள் மிகவும் நிதானமாகவும் சமநிலையுடனும் இருக்க வாய்ப்பு உள்ளது. கடந்த ஆண்டுகளின் சட்டவிரோத குடியேறியவர்களாக அவர்கள் நம்மைப் பார்ப்பதை நிறுத்தி விடுவார்கள், என்றுள்ளது.

இதேவேளை சிங்கள ஊடகம் ஒன்றுக்கு விக்னேஸ்வரன் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது:

**கேள்வி:** விடுதலைப் புலிகள் அமைப்பை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**விக்னேஸ்வரன்:** நீங்கள் பார்ப்பதை போன்று பயங்கரவாதிகள் என்று யாரையும் கூறுவதில்லை. தமது மக்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளால் அவர்கள் போரில் இறங்கினார்கள். அவர்கள் போரில் இறங்கியதற்கு காரணம் அரசுதான்.

**கேள்வி:** உலக நாடுகள் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பார்க்கையில், நீங்கள் அவர்களை பயங்கரவாத அமைப்பாக ஏற்கவில்லையா?

**விக்னேஸ்வரன்:** அரசு செய்யும் தவறுகளை மூடி மறைத்து அதனை கேட்பவரை பயங்கரவாதி என்று கூறுகின்றனர். அது எப்படி சரியாகும்?

**கேள்வி:** ஆனால் அவர்கள் மனிதக்கொலையைச் செய்தமை, அப்பாவிகளை கொன்றமையை ஏற்க முடியுமா?

**விக்னேஸ்வரன்:** இவர்கள் (அரசு) வடக்கில் அப்பாவிகளைக் கொன்றதை சரியெனக் கூற முடியுமா?

**கேள்வி:** இராணுவத்தினர் புலிகளை தவிர, அப்பாவி மக்களைக் கொலை செய்தார்களா?

**விக்னேஸ்வரன்:** 2009 மே 18ஆம் திகதி வரை ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அனைவரும் அப்பாவி மக்கள். அவர்கள் முள்ளிவாய்க்காலிற்கு அழைத்து வரப்பட்டு கொல்லப்பட்டனர்.

**கேள்வி:** அவர்களை அவ்வாறு அழைத்து வந்தது பிரபாகரனா? இராணுவமா? பிரபாகரனே அவர்களை பலிக்கடாவாக பயன்படுத்தியிருக்கலாம்.

**விக்னேஸ்வரன்:** அவருக்கு அப்படி செய்ய வேண்டிய அவசியமில்லையே?

**கேள்வி:** நீங்கள் கூறுவதைப் பார்த்தால் பிரபாகரன் ஒரு குழந்தை. அவருக்கு ஒன்றும் தெரியாது.

**விக்னேஸ்வரன்:** 30 வருடமாக அரசுக்கு எதிராகப் போராடியவரை குழந்தையாக நான் கூறுவதில்லை.

**கேள்வி:** நீங்கள் முள்ளிவாய்க்காலில் பயங்கரவாதிகளின் மயானத்தில் சத்தியப்பிரமாணம் செய்தீர்கள்

**விக்னேஸ்வரன்:** அந்த இடத்திற்கு சென்று, அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கடமை எமக்குள்ளது.

**கேள்வி:** நாட்டின் சட்டத்திற்கமைய பயங்கரவாத செயற்பாடுகளிற்கு ஏதேனும் வகையில் ஒத்துழைப்பு வழங்கும் எதனையும் செய்ய முடியாது.

**விக்னேஸ்வரன்:** எப்படியென்று சொல்லுங்கள் பார்ப்போம். இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என யார் சொன்னது? இறந்தவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளதா?

**கேள்வி:** நீங்கள் வடக்கில் புத்தர் சிலை வைக்கக்கூடாது என சொல்லியுள்ளீர்களே

**விக்னேஸ்வரன்:** பௌத்தர்கள் இல்லாத இடத்தில் அவற்றை வைக்க என்ன காரணம் என்றே கேட்டுள்ளேன்.

**கேள்வி:** அதனால் உங்களிற்கு ஏதாவது பிரச்சனைகள் ஏற்படுகிறதா?

**விக்னேஸ்வரன்:** ஆம். சிங்கள மக்களை அங்கு கொண்டு வர முயற்சிகள் நடக்கின்றன. (ஒ.5)

## கொரோனா...

நெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, கடந்த 24 மணித்தியாலங்களில் 53 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையை சாதாரணமாகக் கருத முடியாது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் சமூகத்தில் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்படவில்லை என்றும், அது போன்ற சூழலை மேலும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

சாலியபுர கஜபா படையணி முகாமில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதாகக் கருதி பொது மக்கள் பல இடங்களிலும் பாதுகாப்பின்றி நடமாடுவது கவலைக்குரிய விடயமாகும். இது வரையில் சமூகத்தில் கொரோனா பரவவில்லை. நாம் பெரும் அர்ப்பணிப்புக்களினால் இந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றோம். என்றார். (ஒ.5)

பணியாளர்கள் தேவை
யாழ் நல்லூரில் இயங்கும் உயர்தர
சைவ உணவகத்திற்கு
பணியாளர்கள் தேவை.
077 766 1083, 021 222 8294

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
செப்ரம்பர் 5,6,7 } பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
12,13,14 } தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
19,20,21 } ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி
இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
பரீட்சை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
கட்டணமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

## மரண அறிவித்தல்



| பாரினில் | பரிசுத்த ஆவியுள் |
|---|---|
| 19 | 01 |
| 09 | 09 |
| 1949 | 2020 |

### திருமதி சிவபாக்கியம் பரமசகாயம்

கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் பரமசகாயம் நேற்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் இராசையா பரமசகாயத்தின் (ஓய்வு நிலை அதிபர் S.L.P.S.1) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, நவமணி ஆகியோரின் அன்பு மகளும், இராசையா, தேவரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும், இராஜரத்தினம், காலஞ்சென்ற அரியரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரதீபா (பிரான்ஸ்), பிரகாஷ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், டீன்நெவில் (பிரான்ஸ்), சிவாஜினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கா (பிரான்ஸ்), பிரவீனா (பிரான்ஸ்), ஆகாஸ் (டென்மார்க்), அபி (டென்மார்க்) ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.09.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 205 6296

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30 | 07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 16-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

2019
மதுசாளினி (Kili) 01(BT)
யோகதீபன் (JAF) 01(BT)
யசிதா (MULLAI) 01(BT)
அருள்ராஜ் (MAN) 01(ET)
தனுஜன் (MULLAI) 02(BT)
தூரசன் (KILI) 02(BT)
ஜீவரதன் (MULLAI) 02(ET)
பிரியங்கன் (KILI) 02(ET)
தக்சயன் (MULLAI) 03(ET)
நிலவன் (KILI) 03(BT)
ஜந்துசன் (JAF) 03(ET)
லாவண்ஜா (JAF) 04(BT)

2018
கலக்சிகா (JAF) 01(BT)
ரஜிதா (MULLAI) 01(BT)
விதுர்சன் (KILI) 01(BT)

2017
கேசனா 01(BT)
தமிழின்யன் 01(ET)
மேரீகனிஸ்ரா 02(BT)
சரண்சனா 03(BT)
கோகுலன் 03(ET)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.